மட்டக்களப்பு - அரசடித்தீவைச் சேர்ந்த

அமரர். சிவநெறிச் செம்மல்

# த. வ. வி. கதிராமப்போடி வன்னக்கர்

அவர்கள் 29.11.2006 இல் சிவபதப்பேறு குறித்த



# 31ம் நாள் நினைவு மலர்

## 29 - 12 - 2006

# சமர்ப்பணம்

எமது குடும்பத் தலைவனாக இருந்து
எம்மைக் காத்து நேசித்து வளர்த்து
உயர்வளித்து இறைவனடி சேர்ந்த

**அமரர்.**

**சிவநெறிச்செம்மல் த. வ. வி. கதிராமப்போடி**


ஆகிய எமது தெய்வத்தின் நினைவாக
எல்லாம் வல்ல ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர்
பாதங்களில் எமது தலைவனின்
ஆத்மா சாந்திபெற வேண்டும் என
இறைவனைப் பிரார்த்தித்து அவரின்
பாதங்களுக்கே
காணிக்கையாக கண்ணீருடன்
சமர்ப்பிக்கின்றோம்.

**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

**அரசடித்தீவு,**
**கொக்கட்டிச்சோலை.**
**T. P. 060 2651658**

A.karunakaran.

உ
சிவமயம்



மலர்வு :
**04 - 10 - 1911**

உதிர்வு :
**29 - 11 - 2006**

## அமரர். சிவநெறிச் செம்மல்

# த. வ. வி. கதிராமப்போடி (வண்ணக்கர்)

அவர்கள்

உ



## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## தேவாரம்

அரியானை அந்தணர் தம்சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறை யுறை சிவபெருமானே
யாரொடு நோகேன் யார்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ யருளிலை யானால்
வார்கடலுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்றருள் புரிவாயே.

## திருவிசைப்பா

ஏகநாயகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போக நாயகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேக நாயகனை மிகுதிரு வீழிமிழலை
விண்ணிழி செழுங் கோயில்
யோக நாயகனை அன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

மீண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள்
விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடியீ சற்காட்
செய்மின் குழாம் புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லாதோ
ரானந்த வெள்ளப் பொருள்
பண்டுமின்று மென்று முள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டு மின்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ யாடும் போதுன்னடியின்கீழ் இருக்கவென்றார்.

## திருப்புகழ்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண் கடலிற் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
எந்தனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர்தமக் கானநிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே.

# ஆசியுரை

29-11-2006 அன்று இறைபதமடைந்த அமரர் கதிராமப்போடி வண்ணக்கர் அவர்களின் ஆத்மா சாந்தி வேண்டி......

மரணம் என்பது மனித வாழ்வில் சலனத்தைத் தரும் ஒன்றாகும். பிறப்பு எனும் அத்தியாயத்தின் இறுதிப்படியே இறப்பு. ஜனனிக்கும் மனிதன் மரணிப்பது ஆண்டவனால் எழுதப்பட்ட சட்டங்களில் ஒன்று. அதை யாருமே மீறவும் முடியாது வெல்லவும் முடியாது.

அமரர் கதிராமப்போடி வண்ணக்கர் மண்ணுலகம் விட்டு விண்ணுலகம் சென்றாலும் அவர் செய்த அறப்பணிகள் இம்மண்ணை விட்டு விலகாது. தேசத்துக் கோயில் என அழைக்கப்படும் கொக்கடிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் மிக நீண்ட காலமாக தன்னை அற்பணித்து ஒவ்வொரு நிகழ்வுகளிலும் முன்நின்று ஆலோசனை கூறி வழிகாட்டி நின்றவர் இவர் ஆவார்.

மனிதன் நோயோடு பிறந்தவனல்ல. நெல்லை விதைக்கும் போது புல்லும் நெல்லோடு இணைந்து வருவது போலவே மனிதன் என்னும் உன்னத வாழ்வோடு நோய் என்றும் தீர்க்க முடியாத களையும் ஒற்றிக்கொண்டது. ஆண்டவனிடம் ஒவ்வொருவரும் தனக்கு வேண்டும் என்று கேட்காமலே ஆண்டவன் வழங்கும் துர்அதிஸ்ட சீட்டே நோயாகும். அவ்வாறு இருந்தாலும் அவரின் சிந்தனையும், எண்ணமும் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் மீதுதான். அப்படிப்பட்ட மாமனிதனின் ஆத்மா சாந்தி வேண்டி எல்லாம் வல்ல ஸ்ரீ தான்தோன்றீஸ்வரப் பெருமானை வேண்டுகிறேன்.

''மரணமே மாண்புடை ஜெகவாழ்வு
இறை சரணமே நம் வாழ்வு......''

**சிவஸ்ரீ வ. சோதிலிங்கம் குருக்கள்**
ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்
கொக்கட்டிச்சோலை.

## மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்
## கௌரவ க.தங்கேஸ்வரி வழங்கிய
# அனுதாபச் செய்தி

## அமரர். சிவநெறிச்செம்மல் த.வ.வி.கதிராமப்போடி வண்ணக்கர்

ஒரு ஐம்பது வருடங்களுக்கு முன் கொக்கட்டிச்சோலையும், அதைச் சுற்றியுள்ள கிராமங்களும் என்ன நிலையில் இருந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கிறேன்.

வெளி உலகம் அறியாத மக்கள் வேளாண்மை வீடு எனக் காலத்தை ஓட்டிக்கொண்டிருந்தார்கள். இவர்களிடையே படித்தவர்கள் குறைவு. அதனால் இவர்களை வழிகாட்ட யாரும் இல்லை.

ஆனாலும் இறைவன் திருக்குறிப்பினால் கதிராமப்போடி வண்ணக்கர் இவர்களுக்கு வழிகாட்டும் தலைவனாக எழுச்சி பெற்றார். இவர் ஒரு படிக்காத மேதை. தனது மதிநுட்பத்தாலும், ஆளுமையாலும் மக்களின் பிரச்சினைகளை நன்குணர்ந்து அவற்றைத் தீர்த்து வைப்பதிலும் அக்கறை செலுத்தினார்.

அரசாங்க அதிபர், D.R.O. (தற்போது பிரதேச செயலாளர்) போன்றவர்களிடம் தமது மக்களின் பிரச்சினைகளை எடுத்துக்கூறி அவற்றுக்குத் தீர்வு கண்டார். பிரயாண வசதி மிகக்குறைவாக இருந்த அந்தக்காலத்தில் கொழும்புக்குச் சென்று பல கருமங்களை ஆற்றி வந்தார். இதனால் இவருக்கு ''கொழும்பார்'' என்ற பட்டப்பெயரும் ஏற்பட்டது.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வண்ணக்கராக நீண்ட காலம் செயற்பட்டு இவ்வாலயத்தின் வளர்ச்சிக்காக மிகவும் பாடுபட்டார். இதனால் இவரை ''வண்ணக்கர்'' என்றே பொதுவாக மக்கள் அழைத்தனர்.

1980 களில் நான் கலாசார உத்தியோகஸ்தராகக் கடமை ஆற்றிய காலத்தில் அடிக்கடி கச்சேரிக்கு வருவார். தான்தோன்றீஸ்வர

ஆலயத்தின் புனரமைப்பு சம்பந்தமாகவும், கொழும்பு இந்துசமய கலாசார திணைக்களத்திலிருந்து பெறவேண்டிய நிதி உதவி சம்பந்தமாகவும் பல நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டோம்.

எளிமையும், அடக்கமும் கொண்ட இவரது அமைதியான சுபாவம் மக்களை இவர்பால் ஈர்த்தது. அதிகம் பேசமாட்டார். நாலு வார்த்தை பேசினாலும் அது ஆழமானதாக அர்த்தமுள்ளதாகவே அமையும்.

நான் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்குச் செல்லும்போதெல்லாம் இவரைச் சந்திக்கத் தவறுவதில்லை. ஆலயத்துக்கு அண்மையில் அவர் வீடு இருந்ததால் அவரைச் சந்திப்பது சுலபமாக இருந்தது. எப்போதும் அன்பொழுகப் பேசுவார்.

இவருடைய தலைமைத்துவம், ஆளுமை, சமூகசேவை, ஆலய சேவை முதலியவற்றால் இவரை மக்கள் அந்தக்காலத்து வன்னிமைபோல் மதித்து மரியாதை செலுத்தினர்.

தொண்ணூற்று ஆறு வயது வரை வாழ்ந்து மறைந்த இவரை நினைக்கும் போதெல்லாம் கிளைபரப்பி விழுதுவிட்டுப் பரந்து நின்ற ஒரு ஆலமரம் பாறி வீழ்ந்தது போன்ற உணர்வே எனக்கு ஏற்படுகிறது.

இவரது தலைமைத்துவம் இன்றைய இளைய தலைமுறையினருக்கு ஒரு ஆதர்சமாக அமையவேண்டும்.

**மட்டக்களப்பு**
15.12.2006

**க. தங்கேஸ்வரி**
பாராளுமன்ற உறுப்பினர்
மட்டக்களப்பு.

# மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ த.கனகசபை அவர்களின் அனுதாபச்செய்தி

## பெருமைக்குரிய மனிதர்

அமரர் தன்மப்போடி கதிராமப்போடி அவர்கள் காந்திய வழியில் வாழ்ந்த ஒரு பெரியார் ஆவார். எளிமை, பணிவு, பிறர்க்கு உதவி செய்தல் இறை சிந்தனை என்பன இவரிடம் நிறைந்து காணப்பட்டன. பொது சேவையில் முன்னின்று செயல்பட்ட ஒரு பெருந்தகை.

இவர் பல வருடகாலம் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வர ஆலய வண்ணக்கராகவும், தாந்தாமலை ஆலய வண்ணக்கராகவும் இருந்து திறம்பட சேவை செய்தவர்.

அத்துடன் மண்முனை தென்மேற்கு ப.நோ.கூட்டுறவுச்சங்க நிர்வாக உறுப்பினராகவும் செயல்பட்டு அப்பிரதேச மக்களுக்கு சேவைகள் பல செய்ததுடன் பல வருடகாலம் வட்டவிதானையாராக இருந்து விவசாய விருத்திக்கும் வழிகாட்டியவர்.

இவரது இவ்வாறான கடின சேவைகளைக் கருத்தில் கொண்டு இந்து கலாசார அமைச்சினால் சிவநெறிச் செம்மல் எனும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்.

எமது குடும்ப நண்பராகவும் இருந்து எங்களுடன் உரையாடி மகிழ்பவர்.

அமரர் கதிராமப்போடி அவர்களை இழந்து வேதனையில் தவிக்கும் அவரது குடும்பத்தினர் அனைவருக்கும் என் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து அவரது ஆத்மா இறையடி சேர பிரார்த்திக்கின்றேன்.

**த. கனகசபை**
மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்
களுதாவளை.

## மண்முனை தென்மேற்கு பட்டிப்பளை பிரதேச கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.ந.தயாசீலன் அவர்களின்

# அனுதாபச் செய்தி

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்"

எனும் குறள்பாவுக்கு இலக்கணமாக

"தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று" எனும் குறளுக்கும் இலக்கணமாக வாழ்ந்து மண்ணுலக வாழ்வை நிறைவு செய்து அமரத்துவம் அடைந்தவர் அமரர் த.வ.வி.கதிராமப்போடி வண்ணக்கர் அவர்கள்.

அம்பிளாந்துறைக் கிராமத்தில் பிறந்து அரசடித்தீவுக் கிராமத்தில் வாழ்க்கையை அமைத்துக்கொண்ட அன்னார் தன்னுடைய வாழ்க்கையின் பெரும்பகுதியினை மண்முனை தென்மேற்குப் பிரதேச மக்களின் சமய, சமூக, கலாச்சார பணிகளில் தம்மை ஈடுபடுத்தி முன்னின்று உழைத்த பெருமகன்.

இப்பிரதேசத்தின் பிரசித்தி பெற்ற ஆலயங்களான தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் படையாட்சிகுல வண்ணக்கராக, செயலாளராக இருந்து சுமார் 30 ஆண்டுகள் இவ்வாலயம் சிறப்புற பல வழிகளில் முன்னின்று உழைத்தவர். சூறாவளியின் பின்னரான ஆலய புனருத்தாரண வேலைகளை நிருவாகத்தினரை தம்முடன் இணைத்துக்கொண்டு ஆலய வேலைகளை பூர்த்தி செய்து கும்பாபிஷேகம் நடைபெற உழைத்தவர்.

குறிப்பாக சித்திரத்தேர் சேதமுற்று இனி ஓட்முடியாது என்று தேசத்தவர்கள் கூறியபோது அதனை சிறு திருத்தத்துடன் ஓடவைத்த பெருமை அவரையே சாரும். அது மாத்திரமல்லாமல் தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயத்தின் வளர்ச்சியிலும் அன்னாருடைய பங்களிப்பு அளவிடக்கரியது. அவர் காலத்தில் அமைக்கப்பட்ட முகப்புக் கோபுர வாயில் பிள்ளையார் ஆலய படிக்கட்டுகள் அவர் திருப்பணியினை

என்றென்றும் நினைவு கூறுபவையாகவுள்ளன. அதேபோல் அரசடித்தீவு விக்கினேஸ்வரர் ஆலயத்தின் புனரமைப்புப் பணியிலும் முன்னின்று உழைத்தவர். இவ்வாறு ஆலய திருப்பணிகளில் தம்மை ஈடுபடுத்தி முன்னின்று உழைத்தமையினை கண்ணுற்ற இந்து கலாச்சார அமைச்சு அவருக்கு ''சிவநெறிச்செம்மல்'' எனும் பட்டம் வழங்கி கௌரவித்தது.

இவ்வாறு சமயப்பணியில் மட்டுமன்றி சமூகப் பணியிலும் தமது கிராமத்து அபிவிருத்திச் சங்கம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கமநல அமைப்புக்களிலும் பல்வேறு பதவியினை வகித்து தமது கிராமத்துக்கும், பிரதேசத்திற்கும் தன்னாலான பங்களிப்பினை நல்கி இப்பிரதேச முன்னேற்றத்திற்கு முன்னின்று உழைத்த ஒரு தலைவனை, ஒரு பெருமகனை, ஒரு நல்ல அறப்பணியாளரை, ஒரு தர்மகர்த்தாவினை இப்பிரதேச மக்கள் இழந்து தவிக்கின்றார்கள் என்றால் மிகையாகாது.

அன்னாரது இழப்பால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கும், இப்பிரதேச மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல தான்தோன்றி அப்பனின் திருவடிகளில் சேர நாமும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி..........

**திரு. ந. தயாசீலன்**
ம. தெ. மே. பட்டிப்பளை
கோட்டக்கல்விப் பணிப்பாளர்.

# உன்பணி முடிந்ததோ?

தன்மப்போடி குஞ்சிநாச்சிப்பிள்ளையின் தவப்புதல்வனாய் அவதரித்து தரணிபோற்ற வாழ்ந்த த.வ.வி.கதிராமப்போடி ஐயா உமது பணி முடிந்ததோ? இல்லை மண்ணில் உன்பணி போதுமென்று விண்ணிற்கு அழைத்தாரோ உலகநாயகன்? எண்ணிப்பார்க்கின்றோம் எங்கள் செம்மலை. கண்முன்னே தோன்றுகிறீர் ஐயா. அகன்று பரந்த சந்ததி என்ற விருட்சத்தை விதைத்தவனையா நீங்கள்.

வையத்துள் பிறந்த மனிதன் தான் ஏற்ற பாத்திரத்தில் நடிக்கவேண்டிய கடமை நமக்குரியது. ஆனால் நம்மை நடிக்க வைப்பவர் இறைவன். அந்தவகையில் வண்ணக்கர் அவர்களையும் வழிப்படுத்தியிருக்கிறார். நல்ல கதாநாயகனாக நாளும் பொழுதும் வளர்ந்த நல்மகனார் இல்லறம் சிறக்க இனிதே நல்லதொரு இல்லானாக நல்ல அம்மாவை கரம்பிடித்தார். நானிலம் அவரைப் போற்றியது, வாழ்த்தியது, குலம் தழைக்க குழந்தைகள் மழலை மொழி பேச குருகுலமா வாழ்ந்த காலத்தில் குமரன் வடிவேலனுக்கு குன்றினிலே குடியமைத்த குன்றத்து விளக்கல்லவா அந்தப் பெருமகனார். அவர் பணி முடிந்ததா?

அங்கே கொக்கட்டி மரத்தடியில் தோன்றிய தான்தோன்றி அப்பனுக்கும், இங்கே தம்பதியல் தம்பிக்கு மணம்முடித்த தொப்பை அப்பனுக்கும் தொண்டு செய்த தொண்டனையா நீங்கள். நயந்து கதைப்பதில் நகைச்சுவையாய் பேசுவதில், நல்வாழ்த்துக் கூறுவதில், நயவஞ்சகருக்கு நல்லவழி காட்டுவதில் நாயகனல்லவோ நீங்கள், உங்கள் நற்பணிகள் முடிந்ததுவோ?

சமயப்பணியே நற்பணி அதற்கு உன்னை அற்பணி என வாழ்ந்து காட்டிய வள்ளல் மக்களின் தலைவன், சிவநெறிச் செம்மல், அறிவுரை சொல்வதிலே நல்ல ஆசான், இறைபணி செய்வதிலே நல்ல தொண்டன், இல்லை என்று கேட்போருக்கு வாரி வழங்குவதில் பாரி, குடும்பத்திற்கு நல்ல குலவிளக்கு, காலத்தின் முயற்சியால் ஞானம் பெற்றனையோ? அதனால் யாக்கை நிலையற்றது என நினைத்து உன் பணி முடித்தாயோ?

பூவோடும், பொட்டோடும், புன்னகையோடும் பூவுலகை விட்டு நீர் முன்செல்லும் நான் வருவேன் நாளை என்று இல்லாள் நல்லம்மாவை முதல் அனுப்பி உன் பணி முடித்தாயோ?

ஆதியும் அந்தமும் இல்லாத, அந்த அரும் பெரும் சோதி வடிவான இறைவன். இவர் பணிகண்டு இனிது அழைத்து இங்கிரும் என்று சொல்லிவிட்டார் போலும். எம்மனம் நினைக்கின்றது.

இந்நாளிலே அன்னாரின் ஆத்மா முத்திப்பேறடைய முதல்வனைப் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திரு.த. சோமசுந்தரம் (அதிபர்)
மட்/குருக்கள்மடம் த.ம.வி.

## உங்கள் உடல் மறைந்தாலும்.....
## உங்கள் பணிகள் மறையவில்லை....

அமரர் த.வ.வி.கதிராமப்போடி (வண்ணக்கர்) அவர்கள் அம்பிளாந்துறையில் கதிராமப்போடி வன்னியனார் பரம்பரையில் தர்மப்போடி தம்பதியினரின் மூத்த மகனாக 1911ம் ஆண்டு பிறந்தார்.

இவர் அரசடித்தீவில் கார்த்திகேசப்போடி தம்பதியினரின் மகள் நல்லம்மாவை திருமணம் செய்து இல்லறம் நடாத்தி ஒன்பது பிள்ளைகளைப் பெற்றெடுத்து 96 (தொண்ணூற்றாறு) வயதுவரை வாழ்ந்த பெருமகனாவார்.

இவர் வாழ்ந்த காலத்தில் சமயப் பணியிலும், சமூகப் பணியிலும் அருந்தொண்டாற்றி அழியாப்புகழினை ஏற்படுத்திக் கொண்டவர். இறைபணி சம்பந்தப்பட்ட கைங்கரியங்களில் முன்னின்று மனந்தளராது அவரால் செய்யமுடிந்தவற்றை நிறைவேற்றியேயாகுவார்.

''அச்சமுற்றடங்கி அறிவகதில்லா கொச்சைமக்களைப் பெறுதலின் அக்குடி எச்சமுற்றே மாந்திருத்தல் நன்று'' என்று ஔவைப்பிராட்டி காட்டிய வீரதீரத்தில் வீறுநடை போட்டவர் என்று கூறினால் மிகையாகாது.

இறைபணிகளை செய்து கொண்டு போகும் போது யாராவது மனம் சோர்ந்தால் ''முயற்சியெடுத்தால் முடியாததொன்றில்லை'' தம்பி நான் முன்னாலே போறேன் நீ பின்னாலே வா என்று விகடமாகப் பேசி யாவரும் வியக்கும்படி செயல்படும் செயல் வீரனாவார்.

இவரின் மரணம் இப்பிரதேசத்தவர்களுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிளப்பாகும்.

அன்னாரின் ஆத்மா ஆறுதலடைய இறைவனை இறைஞ்சுவோமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**இவ்வண்ணம்**

**செ. சற்குணம்**

முன்னாள் விக். ஆலய நம்பிக்கையாளரும்,
அரசடித்தீவு இ.இ.மன்ற ஸ்தாபகரும்.
மட்/அரசடித்தீவு.

## "சிவனடி சேர்ந்த சிவநெறிச் செம்மலின் 31ம் நாள் நினைவுக் கிரியை"

இலங்கைத் தீவிலே மட்டக்களப்பு மாவட்டத்திலே மண்முனை தென்மேற்கைச் சேர்ந்த அம்பிளாந்துறை என்னும் ஊரிலே சைவசமயத்தின் முக்குகர் குலத்தைச் சேர்ந்த படையாட்சி குடி வம்சத்திலே தகப்பனார் தன்மப்போடிக்கும் தாயார் குஞ்சிநாச்சிப் பிள்ளைக்கும் புத்திரராக 04.10.1911ம் ஆண்டு அவதரித்தார். தாய்தந்தையார் கதிராமப்போடி என்னும் நாமம் இட்டு வளர்த்து வந்தார்கள். இளமை சிறுமைக் காலத்திலிருந்தே பிறந்த கிராமத்தில் கல்வி கற்று உரிய பராயம் அடைந்தபின் அப்பகுதியிலே அரசடித்தீவு என்னும் ஊரிலே உயர் குடும்பத்தைச் சேர்ந்த நல்லம்மா என்னும் அம்மையாரைப் பெற்றோரின், விருப்பப்படி திருமணம் செய்து கொண்டார். இல்லறத்தை நல்லறமாக்கி நடாத்தி வருகின்ற நாளிலே அடியாருக்கும், அன்பர்களுக்கும், உற்றார் உறவினருக்கும் அமுது செய்வித்து வாழ்ந்து வந்தார்கள். அப்படியாக வாழ்ந்துவரும் காலத்தில் தமக்குக் கிடைக்கப் பெற்ற அருமைப் புதல்வர்களையும், புதல்விகளையும் பல துறைகளிலும் வல்லுனராக்கி வாழ்ந்ததோடு மட்டுமல்லாமல்

"ஈதல் இசைபடவாழ்தல் அது அல்லது
ஊதிலம் இல்லை உயிர்க்கு

வறியவருக்கு ஈதல் வேண்டும் அதனால் புகழ் உண்டாக வாழ.... வேண்டும் அப்புகழ் இல்லாமல் உயிருக்கு ஊதியம் ஒன்றுமில்லை. தனது குடும்ப வாழ்வு உயர வேண்டுமென்று மட்டும் வாழாமல் தன்னுடைய பணியைத் திருத்தலங்களிலும் மேற்கொண்டுள்ளார். அத்தலங்களான

"ஸ்ரீ விநாயகர் ஆலயம், - அம்பிளாந்துறை"
"விக்னேஸ்வரர் ஆலயம் - அரசடித்தீவு"
"தான்தோன்றீஸ்வரர் ஆலயம் - கொக்கட்டிச்சோலை"
"முருகன் ஆலயம் - தாந்தாமலை"
"நாகதம்பிரான் ஆலயம் - பண்டாரியாவெளி"

போன்ற சிவத்தலங்களிலும் இன்னும் பல தலங்களிலும் தமது திருப்பணிகளைச் செய்து தொண்டாற்றி வந்தார்.

தல யாத்திரை செய்யும் பொருட்டு 1979ம் ஆண்டு தனது மனைவியாகிய நல்லம்மா என்னும் அம்மையாரோடும் இன்னும் பல அடியார்களோடும் இந்தியா சென்று அங்குள்ள சிவத்தலங்களைத் தரிசித்து கங்கா, ஜமுன, காவேரி, சரஸ்வதி போன்ற நதித் தீர்த்தங்களையும் தரிசித்து புகழ்பெற்ற சிவன் அடியார் ஆவார்.

இப்படியாக சில தலப்பணிகள், சமூகப் பணிகள், பிரதேசப் பணிகள், தேசப்பணிகள் செய்து ''வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவருக்கு'' இலங்கை அரசினாலே சிவநெறிச்செம்மல் என்னும் பட்டமும் புகழகமும் சூட்டப்பட்டது.

இறைவனாலே சிருஷ்ட்டிக்கப்பட்ட ஆன்மாக்கள் அனைத்தும் அவர் அவர்கள் செய்யும் செயலுக்கும், கருமத்திற்கும் ஏற்ப இறைவனடியைச் சென்றடைவார்கள். அந்த வகையிலே அமரத்துவம் எய்திய வண்ணக்கரும், சிவநெறிச் செம்மலுமாகிய அன்பர் சிறிது நோய்வாய்ப் பட்டு எம்பெருமானின் திருவடியை நினைந்து.......

''எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ

எம்பெருமான் திருவடியை எண்ணிநல்லார்'' என்னும் அப்பரின் திருமுறையோடு 29.11.2006ம் திகதி அதிகாலைப் பொழுதிலே இறைவனடி சேர்ந்தார். தீ சோதியோடு சேர்ந்த பெருமகனாரின் 31ம் நாள் கிரியை அனைத்தும் சிறந்த முறையிலே நடைபெற்று அவருடைய ஆன்மா மீண்டும் பிறவாமை நிரந்தரமாக இறைவனடி ஒன்றிருக்கப் பிரார்த்திப்பதோடு இத்துயரில் துயருறும் குடும்பத்தாருக்கும், உற்றார், உறவினருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தையும், செய்தியையும் பிரதேச சார்பிலும் ஸ்ரீ தாந்தாமலை ஆலய பரிபாலன சபை சார்பிலும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சுபம்**

**ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.**

**ஞா. துரையப்பா** (ச.நீ)
தாந்தாமலை முருகன் ஆலய
பரிபாலன சபை பொருளாளர்
பனிச்சையடி முன்மாரி

# சிவநெறிச் செம்மல் அமரர் த. கதிராமப்போடி அவர்கள்

மகிழை மகேசன்

காலஞ்சென்ற அமரர் த.கதிராமப்போடி அவர்கள் அம்பிளாந்துறையில் பிறந்து அரசடித்தீவில் புகுந்து மட்டக்களப்பு அம்பாரை மாவட்ட மக்களால் நன்கு மதிக்கப்பட்டு வாழ்ந்தவர். மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் மூத்தவர் என்ற பெருமையைப் பெற்று வாழநாள் ஒரு நூற்றாண்டை எட்டிப்பிடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தபோது இவர் எம்மை விட்டுப்பிரிந்தார். இவ்வாறு நீண்டகாலம் வாழ்வதற்கு எல்லோருக்கும் வாய்ப்பு கிடைப்பதில்லை. இவ்வரிய வாய்ப்பினை ஆண்டவனிடம் பெற்ற அமரர் கதிராமப்போடி அவர்களை வாழ்த்துவோம். இவரின் மரணம் ஒரு மங்கல மரணம் என திருப்தி அடைவோம். எனினும் இவரது வாழ்வு பற்றி நாம் எண்ணிப் பார்ப்பது மிக அவசியமாகிறது.

நாம் ஒரு மனிதனின் வாழ்வை மதிப்பீடு செய்யும்போது அவர் எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்பது அவ்வளவு முக்கியம் பெறுவதில்லை. மூத்தவர்கள் எல்லாம் முதிர்ச்சியடைந்தவர்களாக இருப்பதில்லை. ஒரு நூற்றாண்டு வாழ்ந்தும் சோற்றுக்கு கேடும் பூமிக்கு பாரமுமாக வாழ்ந்தவர்கள் பலரைப் பார்த்திருக்கிறோம். இத்தகையோரின் முதிர்ச்சியோ, அனுபவமோ வாழ்பவர்களுக்கு எவ்வகையிலும் உதவுவதில்லை. இவர்கள் வாழ்ந்தும் வாழாதவர்களே. எனவே ஒரு மனிதன் எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்பதைக் காட்டிலும் அவர் எப்படி வாழ்ந்தார், என்ன செய்தார் என்பனவே வாழ்வை மதிப்பீடு செய்ய உதவுவனவாக உள்ளன. அமரர் கதிராமப்போடி அவர்கள் நீண்டகாலம் வாழ்ந்தவர் என்பதோடு இவர் வாழ்ந்த முறையும் வாழ்க்கையில் செய்தவையும் இவர் வாழ்ந்த சமூக மட்டத்தில் பெரிதும் பாராட்டுதற்குரியன. இவரது அனுபவமும் முதிர்ச்சியும் எம்மவர்க்கு ஒரு வழிகாட்டியாக அமைந்தன.

அமரர் கதிராமப்போடி அவர்கள் 20ம் நூற்றாண்டில் இரண்டாவது தசாப்தகாலத்தின் முற்பகுதியில் அம்பிளாந்துறைக் கிராமத்தில் பிறந்தவர். இக்காலத்தில் பழமையில் ஊறிக் கிடந்த படுவான்கரைப்









பகுதி படிப்படியாக விழிப்படையத் தொடங்கியது. வெளியிடத் தொடர்புகளாலும் புதுமுறைக் கல்வியினாலும் நவீன யுகத்தை இங்கு வாழ்ந்தோரும் அறியத் தொடங்கினர். மட்டக்களப்பு மாநிலத்தில் உரோமன் கத்தோலிக்க மிஷனும், மெதடிஸ்த மிஷனும் ஊர்கள் தோறும் பாடசாலைகளை தீவிரமாக உருவாக்கி வந்தன. இதனால் படுவான்கரைப் பிரதேசத்திலும் நவீன கல்வி அறிவு வளர்ச்சியடையத் தொடங்கியது. மேலும் பணக்கார வீட்டுப் பிள்ளைகள் மட்டக்களப்பு, கல்முனை நகரங்களில் அமைந்திருந்த பெரிய பாடசாலைகளுக்கும் படிக்கச் சென்றனர். இச்சூழ்நிலையில் அமரர் கதிராமப்போடி அவர்களும் இந்நகரங்களுக்குச் சென்று கற்றவர். இதனால் தமிழோடு ஓரளவு ஆங்கில அறிவும் இவரிடம் காணப்படலாயிற்று. இவரது குடும்பம் விரிவானது. ஏறாவூர், நற்பிட்டிமுனை, எருவில், பாண்டிருப்பு என பல ஊர்களிலும் இவர் உறவினர்கள் வாழ்ந்தனர். ஓரிடத்தில் அடைந்து கிடக்காது அங்கும்மிங்கும் துடிப்பாக திரிவது இவருக்கு இயல்பானது. இதனால் பல ஊர்களிலும் வாழ்ந்த உறவினர்களிடம் இவர் அடிக்கடி சென்று வந்தார். மேலும் கொழும்பு உட்பட இந்நாட்டில் இருந்த வெளி நகரங்களுக்கும் சென்று வருவதிலும் இவருக்கு பெரு விருப்பிருந்தது. வாய்ப்பு கிடைக்கின்ற போதெல்லாம் கதிர்காம யாத்திரை செல்லும் வழக்கமும் இவரிடம் காணப்பட்டது. அடிக்கடி கொழும்புக்கு சென்று வருவார். இதனால் இவருக்கு கொழும்பார் என்ற பட்டப்பெயர் உருவாயிற்று. வெளியில் இருந்து வரும் புதுமைகளையெல்லாம் உள்வாங்கிக் கொள்கின்ற இந்நாட்டின் தலைநகர் கொழும்பு இதனால் கொழும்பார் என்னும் பட்டப்பெயர் ஒரு வகையில் புதுமையாளர் என பொருள்படும் எனலாம்.

காலத்திற்கு ஏற்ப தம் எண்ணங்களையும் செயற்பாடுகளையும் மாற்றிக்கொள்ளுதல் அவசியமாகும். கால மாற்றத்திற்கு தக்கபடி தம்மை மாற்றிக் கொள்ளாத தனி மனிதர்களும் தாபனங்களும் நிலைபெற்று வாழ்வது கடினம். இவ்வகையில் அமரர் கதிராமப்போடி அவர்களும் தாம் பெற்ற அறிவுக்கும் வெளியிடத் தொடர்புக்கும் ஏற்ப தமது எண்ணங்களையும் செயற்பாடுகளையும் மாற்றி வாழும் தன்மையாளராக காணப்பட்டார். தாம் பிறந்து வாழ்ந்த சூழ்நிலையில் காணப்பட்ட மூட நம்பிக்கைகளையும், பிற்போக்கு வாதங்களையும் இவர் கடிந்தார். பூசாரிமாரின் செயற்பாடுகளை கேலி செய்வார்.

ஜனியம், கழிப்பு, காவல்பண்ணுதல், அஞ்சனம் பார்த்தல், குறி பார்த்தல் இவற்றை எல்லாம் இவர் ஏற்றுக்கொள்வதில்லை. தெய்வமாக உருக்கொண்டு ஆடுவதையும் அது தொடர்பான சடங்குகளையும் இவர் பெரிதாக விரும்புவதில்லை. மதுவுக்கும் அடிமைப்பட்டு வாழ்பவர்களையும் இவருக்குப் பிடிக்காது. சாதிமுறை ஏற்றத் தாழ்வுகளை பாராட்டி வாழும் பழக்கம் இவரிடம் காணப்படவில்லை. கோயில்களில் தொண்டு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களோடு சேர்ந்து பழகுவதும், கொடுப்பனவுகளை குறைவின்றி கொடுப்பதும் இவரிடம் காணப்பட்ட உயர்ந்த பழக்கங்களாகும். தான்தோன்றீச்சரத்தில் உயர்வு, தாழ்வின்றி எல்லாக் குடியாரின் திருவிழாக்களையும் சமதரத்தில் நடத்த வேண்டும் என்பதே இவர் கோட்பாடு. சட்டிகுடியை சேர்ந்தவர்களுக்கு திருவிழா கொடுப்பதில் இவர் முன்னின்று செயல்பட்டார். இதை எதிர்த்தவர்களை கூட்டங்களில் இவர் கடிந்து கொண்டமை இன்றும் என் நினைவில் நிற்கின்றது. வேட குடியாருக்கும் திருவிழா கொடுக்க வேண்டும் என்பது இவரின் நீண்டகால விருப்பமாக இருந்து நிறைவேறியது.

அமரர் த.கதிராமப்போடி வண்ணக்கர் பதவியை ஏற்றுக்கொண்ட காலத்தில் தான்தோன்றீஸ்வர ஆலயத்தில் ஈடுபாடு கொண்ட இளைஞர் கூட்டத்தில் நானும் ஒருவனாக இருந்தேன். அக்காலத்தில் தான்தோன்றீச்சரத்தில் கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிப்பதில் எங்கள் கூட்டம் மிகுந்த ஈடுபாடு காட்டியது. விரதகால செயற்பாடுகளிலும், நடைமுறைகளிலும் இக்கோயில் சில மாறுதல்கள் கொண்டுவர நாங்கள் முயற்சித்தோம். அவற்றையெல்லாம் பாராட்டி செயற்படவைத்த பெருமை அமரர் கதிராமப்போடி அவர்களுக்குரியது. இளைஞர் கூட்டத்தை ஒம்மோடு வைத்திருந்து எங்கள் சேவையை கோயிலுக்கு பெற்றுக் கொடுக்கவேண்டும் என்பதில் இவர் பெருவிருப்புக் காட்டினார். அக்காலத்தில் வருடாந்த உற்சவ தேரோட்ட நாட்களில் தொண்டர் இயக்கமொன்றினை உருவாக்கி சேவை செய்து வந்தோம். அமைதியையும் ஒழுங்கையும் பேணுதல், பாதுகாப்பு வழங்குதல், யாத்திரியர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தல், இன்னோரன்ன பணிகளையெல்லாம் இத்தொண்டர் இயக்கம் மேற்கொண்டது. மேலும் இலங்கை ஒலிபரப்பு நிலையத்தாரைக் கொண்டு தேரோட்ட நிகழ்ச்சிகளை நேரடி அஞ்சலி செய்தல் புலவர்களைக் கொண்டு

கோவில் மீது திருப்பதிகம் பாடுவித்தல் முதலிய சேவைகளும் எங்களால் செய்யப்பட்டன. இம்முயற்சிகளுக்கெல்லாம் எங்களோடு முன்னின்று உழைத்தவர். அமரர் த.கதிராமப்போடி அவர்கள் இத்தோடு அக்கால படையாண்டகுடித் திருவிழாவைப் பற்றியும் இங்கு சிறிது குறிப்பிடுதல் வேண்டும். மற்றைய எல்லாத் திருவிழாக்களில் கொடியேற்றம் முதல் கொடி இறக்கம் வரை முழு இரவு நாட்டுக்கூத்து ஆடுவது அன்று கோயில் வழக்கம். விதிவிலக்காக படையாண்ட குடியார் திருவிழாவில் மட்டும் சொற்பொழிவுகளும், வேறு கலைநிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்படும். இதில் முன்னின்று உழைப்பவர் அமரத்துவம் எய்திய கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த ஏ.தியாகராசா ஆசிரியர் அவர்கள் இவ்வேற்பாடுகளை நல்லபடி செய்யவும் நிகழ்ச்சிகளை ஒழுங்காக நடாத்தவும் உறுதுணையும், தலைமையும் தந்தவர் அமரர் த.கதிராமப்போடி அவர்கள்.

ஒரு தலைமுறை காலத்திற்கு மேல் தான்தோன்றீச்சரத்தில் வண்ணக்கராக இருந்த அமரர் த.கதிராமப்போடி அவர்களின் இப்பதவிக் காலத்தை இரண்டாகப் பிரித்து நோக்கலாம். அவை நிருவாக சபை முறைமைக்கு முற்பட்டகாலம், நிருவாகசபை முறைமைக்கு உட்பட்ட காலம் என்பன இவ்விரு காலப்பகுதிகளிலும் இவர் பல சேவைகளை இங்கு முன்னின்று செய்தார். பொதுவாக அபிவிருத்தி என்பது மாற்றங்களால் பிரதிபலிக்கப்படுவது இவ்வகையில் இவரது பதவிக்காலத்தில் பின்வரும் பல மாறுதல்கள் நடந்ததை அவதானிக்க முடிகிறது.

1. தம்பமண்டபம் அமைக்கப்பட்டமை
2. இரண்டாவது சுற்றுமதில் புதுப்பிக்கப்பட்டமை.
3. உள் சுற்றுமதில் திருத்தியமைக்கப்பட்டமை.
4. வாலஸ்தாபனம் செய்து சகல கோயில்களும் புதிதாக அமைக்கப்பட்டமை.
5. அலுவலகக் கட்டிடத் தொகுதி, வசந்தமண்டபம், இராஜகோபுரம், மணித்தூண்கள் என பலவும் புதிதாக அமைக்கப்பட்டமை.
6. மூன்றாவது வீதி விஸ்தரிக்கப்பட்டமை.
7. தீர்த்தக்கேணி அமைக்க முயற்சித்தமை.
8. சில காணிகளை விற்றும் சில காணிகளைப் பெற்றும் நிலவுடமையில் மாற்றங்கள் ஏற்படுத்தியமை.

9. இயன்ற அளவு தேர்களைப் புனரமைப்பு செய்தமை.
10. புதிதாக சில குடிப்பிரிவினருக்கு திருவிழாக்கள் கொடுத்தமை.
11. வேளாளர் தமது கோவில் சேவையில் இருந்து விலக அதற்கு மாற்று ஒழுங்கு செய்தமை.
12. குருக்கள் பரம்பரையில் ஒரு பிரிவினர் விட்டு விலக அதற்கு மாற்றொழுங்குகள் செய்தமை.
13. கோயில் மகாகும்பாபிஷேகம் செய்வித்தமை.
14. வன்செயல் தாக்கத்திலிருந்து மீள்யாகங்களும், விசேட அபிஷேகங்களும் செய்தமை.
15. பரிபாலனத்தில் நிருவாகசபை முறை புகுத்தப்பட்டமை.
16. அலுவலக முறையும் கணக்கப்பிள்ளை முறையும் தொடங்கியமை.
17. கந்தசஷ்டி இறுதிநாளில் சூரன்போர் ஏற்பாடு செய்தமை.
18. தாந்தாமலை நிருவாகத்தை இக்கோயில் நிருவாகம் பொறுப்பேற்று செய்தமையும் பின் விட்டு விலகியமை.

என பல மாறுதல்கள் இவரது பதவிக்காலத்தில் இக்கோயிலில் ஏற்படுத்தப்பட்டன. இவற்றையெல்லாம் மற்றய நிருவாகிகளுடன் இணைந்தே இவர் செயற்படுத்தினார். எனினும் இவரது பங்களிப்பு இவற்றில் மிகமுக்கியமானது.

இவற்றில் எல்லாம் இவர் சேவையை பல மதிப்பீடு செய்வதற்கு அக்கால இவ்வாலயச் சூழ்நிலையை நாம் சற்று எண்ணிப்பார்க்க வேண்டும். 1976ம் ஆண்டு இக்கோயிலில் ஏற்பட்ட களவைத் தொடர்ந்து இங்கு ஏற்பட்ட மிதவாதம் புரட்சி 1978ம் ஆண்டு சூறாவளியை அடுத்து இக்கோயிலில் ஏற்பட்ட பாதிப்புக்கள் 1984ம் ஆண்டு முதல் வன்செயலால் இக்கோயிலில் ஏற்பட்ட பலவகைத் தாக்குதல்கள் சூழ்நிலையில் வாழ்ந்த மக்களின் வருமானமும், விவசாயத் தொழிலும் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வந்தமை சூழ்நிலையில் அறிவு வளர்ச்சியால் ஏற்பட்ட புதிய மாறுதல்களின் அவசியம் பற்றிய கருத்துக்கள் என பல சவால்களுக்கு இவரது பதவிக்காலத்தில் தான்தோன்றீஸ்வரர் ஆலய நிருவாகம் பதில் இறுக்க வேண்டியிருந்தது. இவற்றுக்கெல்லாம் மேலாக இக்கோயிலில் நடைபெற்ற பிரமாண்டமான சேவைகளுக்கு போதிய நிதிவசதி இல்லாமை பெரும் சவாலாக இருந்தது. இவற்றையெல்லாம் முன்னின்று எதிர்கொண்டு சமாளித்த

தான்தோன்றீஸ்பரர் ஆலய நிருவாகத்தில் அமரர் கதிராமப்போடியின் பங்களிப்பு மிகமுக்கியமானது. எத்தனை ஏச்சு பேச்சுக்களும், கஸ்ட நஸ்டங்களும் ஏற்பட்ட போதிலும் அவற்றை எல்லாம் வலுவாக நின்று இவர் சமாளித்தார்.

இச்சந்தர்ப்பத்தில் இவரது தூங்காமை, துணிவுடமை, விடாமுயற்சி, தன்னம்பிக்கை இவற்றையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக உள்ளோம். தனது வீட்டில் எவ்வளவு வேலை இருந்தாலும் அவற்றையெல்லாம் விடுத்து தான்தோன்றீஸ்வரர் ஆலய பணியை இவர் முழுநேர வேலையாகக் கொண்டு வாழ்ந்தார். இரவுபகல் பாராமலும் பசி உடல்நலங்களை கவனியாமலும் அர்ப்பண சிந்தையோடு இக்கோவிலுக்கு இவர் செய்த பணிகள் உடன் இருந்தவர் நன்கறிவர். எத்தகைய எதிர்ப்புக்கள் வந்தாலும் பிரச்சனைகள் வந்தாலும் அவற்றைத் துணிவுடன் எதிர்கொண்டார். அஞ்சாமைக்கு இவர் தக்க எடுத்துக்காட்டான மனிதர். தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் இலங்கை இராணுவத்திடமும், இந்திய இராணுவத்திடமும் பல சந்தர்ப்பத்தில் துணிச்சலாக நின்று குரல் கொடுத்து தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திற்கும் தாந்தாமலை ஆலயத்திற்கும் இவர் செய்த பணிகள் எண்ணி எண்ணி வியக்கத்தக்கன. சொற் சாதுரியத்திற்கு இவர் ஒரு தக்க எடுத்துக்காட்டானவர். சந்தர்ப்பத்திற்குத் தக்கபடி செயற்படுவதும் சமயோசிதமாக உரையாடுவதும் இவரது• தனிச்சிறப்பு வாய்ந்த இயல்புகளாகும்.

தான்தோன்றீஸ்வரத்திற்கும் தாந்தாமலை ஆலயத்திற்கும் அரசடித்தீவு ஊர்க்கோயிலுக்கும் இவர் ஆற்றிய பணிகள் அழப்பரியன. இப்பணிகளையும் இப்பணிகளை செய்வதற்கு இவர் கையாண்ட முறைமைகளையும் மேலும் விரித்துரைக்க இது வாய்ப்பன்று. இவற்றையெல்லாம் நோக்கியே இலங்கை இந்துசமய இந்து கலாசார அமைச்சு இவருக்கு "சிவநெறிச்செம்மல்" என்னும் பட்டம் சூட்டி கௌரவித்தது. இச்சமயப் பணிகளைவிட இவரது சமூக கலாசார விவசாயப் பணிகளும் பல உள. இவற்றையெல்லாம் விரித்துரைக்கில் ஒரு புத்தகமே எழுதிவிடலாம். இவர் பல வழியிலும் பாராட்டப்பட வேண்டியவர் பாராட்டுவோம். இவர் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை ஒன்றிணைந்து பிரார்த்திப்போம். இவர் தொட்ட பணிகளை பின்தொடர்ந்து தூய்மைப்படுத்தியும் மேற்கொள்வோம்.

**நன்றி**

# அமரர் த.வ.வி. கதிராமப்போடி (வண்ணக்கர்) பற்றிய பொற் குறிப்புக்கள்

※ அமரர் த.வ.வி.கதிராமப்போடி அவர்கள் 1911.10.04ம் திகதி தன்மப்போடி குஞ்சிநாச்சிப்பிள்ளை தம்பதியினருக்கு மகனாக அம்பிளாந்துறையில் அவதரித்தார்.

※ தாய்க்கு தலைமகனாக இவர் ஒரு சகோதரனுக்கும் ஏழு (07), சகோதரிகளுக்கும் தமயனாவார்.

※ 5ம் வகுப்பு வரையான தனது ஆரம்பக்கல்வியை மட்/ அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயத்தில் பயின்றார். பின்னர் 8ம் வகுப்புவரை கல்முனை சென்மேரிஸ் பாடசாலையில் கற்றார். மேலதிக கல்விக்காக மட்/சென் மைக்கேல் கல்லூரியில் தன்னை இணைத்துக்கொண்டார்.

※ கல்வி வாழ்க்கை நிறைவுபெற்ற பின்னர் 1939ம் ஆண்டு அரசடித்தீவைச் சேர்ந்த கார்த்திகேசப்போடி தம்பதியினரின் அன்பு மகள் நல்லம்மாவை காதல் திருமணம் செய்துகொண்டார்.

※ இல்லற வாழ்வில் இவர்களுக்கு ஆறு புதல்வர்களும் நான்கு புதல்விகளும் அடங்கலாக பத்துப் பிள்ளைகளைப் பெற்றெடுத்தனர்.

※ இல்லற வாழ்வில் இனிதே ஈடுபட்ட இவர் சமயப்பணிக்காகவும், சமூகப் பணிக்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

※ 1958ம் ஆண்டு காலப்பகுதியில் மண்முனை தென்மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் காரியதரிசியாக கடமையாற்றி மக்களுக்கு சிறந்த சேவை செய்தார்.

※ 1958ம் ஆண்டு தொடக்கம் 1970 ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நாவற்கேணி கண்டத்தில் சுமார் இருபத்திரண்டு (22) வருடங்கள் வட்டவிதானையாக பணியாற்றி விவசாயிகளுக்கு சேவை செய்தார்.

※ 1966.12.05ம் திகதியிலிருந்து அரசடித்தீவு விக்னேஸ்வரர் ஆலயத்தின் செயலாளர் பொறுப்பை கடமையேற்ற அவர் 1995ம் ஆண்டு வரையும் சுமார் 29 ஆண்டுகள் அப்பணியை செவ்வனே செய்தார்.

※ இவர் காலத்திலேதான் இவ்வாலயத்தில், 1968ம் ஆண்டு களஞ்சிய அறையும் 1969ம் ஆண்டு சுற்றுமதில் மற்றும் முன்மண்டபம் என்பன அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

※ தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலயத்தில் பல வருடங்களாக தலைவராகவும், செயலாளராகவும் கடமையாற்றிய இவர், அவர் காலத்திலே குறிப்பிடத்தக்க பணிகளையும் செய்தார்.

※ தாந்தாமலை முருகன் ஆலய நுழைவாயிலில் அமைக்கப்பட்டுள்ள முருகப்பெருமானை சுமந்து நிற்கும் நுழைவாயிற் கோபுரமும் மலைமீது ஏறுவதற்கான படி அமைப்பும் இவர் காலத்தில் செய்யப்பட்டமை சிறப்பம்சமாகும்.

※ படையாட்சி குடியின் தலைவராக விளங்கிய இவர் பல ஆண்டுகளாக அக்குடியின் மேம்பாட்டிற்கும், அக்குடி சார்ந்த பெருவிழா சிறப்புப் பெறவும் காரணமாக விளங்கினார்.

※ கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் செயலாளராக கடமையாற்றிய அக்காலத்திலே போற்றத்தக்க சைவப் பணிகளைச் செய்தார்.

※ கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் நீற்றுக் கட்டிடமாக இருந்தபோது அதை மாற்றி அமைப்பதற்கும், உடைப்பதற்கும் எல்லோரும் தயங்கினர். எனினும் அமரர் த.வ.வி.கதிராமப்போடி அவர்கள் எதுவித தயக்கமும் இன்றி தான்தோன்றி ஈஸ்வரருக்கு புதிய ஆலயம் அமைக்க வேண்டும் என்ற ஆவலில் தான்தோன்றி ஈஸ்வரரரை உளமார வணங்கி பழைய ஆலயத்தை உடைக்க அனுமதி பெற்றதோடு தானே மூலஸ்தானத்தின் மேல் முதலில் ஏறி உடைத்து இன்றைய புதிய ஆலயம் மலர்வதற்கு வித்திட்ட பெருமகனாவார்.

※ அத்தோடு ஓடமுடியாதபடி-மிகவும் சிதைந்திருந்த சித்திரத்தேரை திருத்த முடியாதென்று எல்லோரும் சவால் விட்டபோதும் அதனை திருத்தி ஓடவைக்க முடியும் என்று நம்பிக்கை கொண்டு அதனை சாதித்தும் காட்டியவர்.

※ இவர் சைவத்திற்கு ஆற்றிய அளப்பெரிய தொண்டு காரணமாக இவருக்குப் பல பட்டங்களும் சிறப்புக்களும் கிடைத்தன.

※ 1994 ஆனி 11ம் திகதி இவர் சைவத்திற்கு ஆற்றிய பணியை கௌரவித்து இந்து கலாசார அமைச்சு கொழும்பில் நடைபெற்ற பக்திப் பெருவிழாவில் ''சிவநெறிச் செம்மல்'' எனும் சிறப்புப் பட்டத்தை வழங்கியது.

※ 2000ம் ஆண்டு அரசடித்தீவு இளங்கதிர் கலாமன்றம் இவர் சமயத்திற்கு ஆற்றிய தொண்டுக்காக பொன்னாடை போர்த்தி பொற்கிளி வழங்கி கௌரவித்தது.

※ 18.03.2001 அன்று ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலனசபை இவர் ஆற்றிய சேவையை கௌரவித்து ''பாராட்டு வாழ்த்தோலைப்பா'' வழங்கி கௌரவித்தது.

※ அமரர் த.வ.வி.கதிராமப்போடி அவர்கள் தனது வாழ்நாளில் ஆற்றிய பணிகளில் ஒரு சிலவே இவைகள் எப்போதும் இறை சிந்தையிலே திளைத்திருந்த இவர் 29.11.2006ல் இறைபதம் அடைந்தார்.

*தொகுப்பு*
**திரு. த. பேரின்பராசா (B.A)**
இளங்கதிர் கலாமன்ற தலைவர்
அரசடித்தீவு.

# சுவிஸ் இருந்து கண்ணீர் அஞ்சலி

தன்மப்போடி மகனாகி குஞ்சிநாச்சிப்பிள்ளை
பெற்றெடுத்த தலைமகனே அப்பா! ..........

கதிராமப்போடி பெயர் கொண்டு
கொழும்பார் என வாழ்ந்தாய் அப்பா! .......

கொக்கட்டிச்சோலை உறை ஈஸ்வரனார்
என் அப்பன் என்றுரைப்பாய் எந்நாளும்.....

கங்கைதனை தலை அணிந்த பரமஈஸ்வரன்
இடப்பாகம் ஈஸ்வரியை கொண்டதனால்......

கங்கேஸ்வரி எனப் பெயர் வைத்தாய்
கங்கைபோல் எந்நாளும் கண்ணீரை விடுகின்றேன் என் அப்பா!......

படையாட்சி அவர் குலத்தில்
வண்ணக்கர் ஆனாயே அப்பா! .........

நாற்பது வருடங்கள் இறைதொண்டு செய்து
நல்ல பெயர் பெற்றாயே..........

தாந்தாமலை முருகன் அடிவணங்க
மலைதனிலே படி அமைத்தாய்.........

இறை தொண்டை தொடர் தொண்டாய்
செய்ததனால் சிவநெறிச் செம்மலானாய்......

இப்புவியில் புகழ் கொண்டாய்
தொண்ணூற்று ஆறு வருடங்கள்.........

வாழவந்த புவிதனிலே புகழோடு
வாழ்ந்தது போதும் எனச் சென்றாயோ.......

கார்த்திகை கொடி பூத்து கருகுமுன்பே
மார்கழி நீர் ஆட சிவலோகம் சென்றாயோ!.....

இல்லறத்தில் நல்லம்மா கரம்பிடித்து
பத்துப்பேர் உன்மக்கள் அப்பா!...........

வேட்கை விரும்பியதால் வீடு இழந்தோம்
விளைநெல் வயல் இழந்தோம்...........

உற்றாரை உறவினரை உடன் பிறப்பு
அத்தனையும் ஏன்! ஊர்கூட கைவிட்டு வந்தபோது........

கடப்புவரை நீவந்து கண்ணீர்விட்ட
நினைவு எண்ணி பத்து வருடங்கள் வாழ்ந்து விட்டோம்.......

கடலினிலே தனிமையிலே கரைசேர்ந்த கர்ணன்போல்
என் கணவன் கடல் கடந்த சுவிஸினிலே வாழ்வுவேண்டி சென்றதனால்....

உன் கடைசிப் பயணத்தில்
கால் தொட்டு அழவில்லை அப்பா!...........

கதறியழ வைத்து விட்டு சிவனோடு நீ வாழ
பரலோகம் சென்று விட்டாய் அப்பா!.......

காலடியில் கதறிஅழ முடியாமல்
தவிக்கின்றோம் நாங்கள்.........

கண்கள் குளமாகி
கங்கை போல் வழியுதப்பா.........

கண்ணீர் அஞ்சலிக்காய்
சமர்ப்பணமே இப் ''பா'' வடிவம் என் அப்பா!.........

இறைதொண்டு என்னவென
வழிகாட்டி சென்று விட்டாய்..........

ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய செயலாளராகவும், வண்ணக்கராகவும் சேவையாற்றி ஓய்வுபெற்ற பின்னர் ஆலய நிருவாகத்தினரால் பொன்னாடை போர்த்தி, பொற்கிளி வழங்கி, வாழ்த்துப்பா பாடி கௌரவமளித்தபோது எடுக்கப்பட்ட சில காட்சிகள்





உன் பணியே என்றும்
இருக்கும்வரை நாம் செய்வோம்.........

இருக்கும் வரை வாழ்ந்து விட்டு
உன்வழிக்கே வருகின்றோம் அப்பா!.......

சிவபெருமான் காலடியில்
சங்கமமாய் நாம் இருக்க..........

மகள் : **திருமதி. கங்கேஸ்வரி சுந்தரலிங்கம்**
**பேரன், பேத்திகள், பூட்டப்பிள்ளை**
**சுவிஸ்லாந்து.**

மருமகன் :
சுவிஸ்லாந்தின் உலக தமிழ் பண்பாட்டுக் கழக செயலாளர்
**திரு. நாகமணி சுந்தரலிங்கம்**
((மு.இ.போ.ச.மட்/சாலை வீ. பரிசோதகரும்,
மட்/தாந்தாமலை குமார் பொன்னம்பல ஞாபகார்த்த மண்டப ஸ்தாபகரும்)
**சுவிஸ்லாந்து.**

# தாயிற்கு நிகரான தந்தையை நினைத்து

என்னினிய அன்பான அப்பாவே
விரைந்தோடும் கால நீரோட்டத்தில் மாதமொன்று கடப்பினும்
தாங்குமா என்மனம் இனித் தூங்குமா எம்விழி!
ஆறுதல் சொல்ல யாரிருந்தென்ன? உன்
அன்புக்கு நிகராய் எவர் வருவார்?
அன்பு அப்பாவே!
நீர் கைப்பிடித்து கட்டித் தந்தவள்
அரவணைத்து ஆறுதல் சொல்லினும்
உங்களின் இடைவெளி இனிப் பெருவெளியே!
என் பிள்ளைகள் உங்கள் பேரப்பிள்ளைகள்
சாமப்பொழுதில் உங்களை கேட்டு
அலறியழுகின்றார் அந்த மழலைகள் கவலையில்
நாமும் கரைந்து உம் நினைவினில் நனைகின்றோம்
மாமா மாமா என்றும் மருமகள் வாடிக் கிடக்கின்றாள்
மழைநீராகி விழிகளில் கண்ணீர் தன்னைப் பொழிகின்றாள்
ஆமாம் விதியின் கோட்டை யாரால்
மாற்றிட முடியுமிங்கே! ஆனாலும்
எங்கள் காயங்கள் ஆறிட எப்படி முடியுமிங்கே!

அப்பா!
ஒளிவிழும் காலையில் அழுது தொழுது
ஆண்டவனை கேட்கின்றேன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டி
வாழும்போது எமக்கு வழிகாட்டிய அகல்விளக்கே!
இனியெப்போதும் எமக்கு ஒளிகொடுங்கள்
வானத்திலிருந்து உங்கள் பேரக்குழந்தைகளுக்கு
ஆசி கொடுங்கள்
துன்பங்களின் போதெல்லாம் துவண்டு விழாப்
பலம் கொடுங்கள்
அப்பாவே!
சந்திரன் ஏனெப்போதும் தங்களோடேயே
வருவதாக உங்கள் பேரக்குழந்தைகள்
கேட்ட கேள்விக்கு
உங்கள் மருமகள் அது அப்பப்பா என
சொல்லி வைத்திருக்கிறாள்.
அந்த நம்பிக்கைக்கு சாட்சியாய்
எப்போதும் எங்களோடேயே கூட வாருங்கள்.

திரு.திருமதி.சிவபாலன் சாந்தினி
குடும்பம்
மட்டக்களப்பு.

உ

திருச்சிற்றம்பலம்

சிவமயம்

''சித்தர்'' பரம்பரையை பதினெண்வர் என ஆன்றோர் வகுத்திருப்பினும் அவர்கள் எண்ணிலடங்காத தொகையினரென தற்கால ஆய்வாளர்கள் ஐயுறுகின்றனர். காலாதி காலமாக உள்ளொளி உணர்த்திய உத்தமர்களாகவும், இறையியல் பற்றிய சீர்திருத்தங்களை உணர்த்தியவர்களாகவும் அன்னவர்கள் கருதப்படுகின்றனர்.

இவர்களைப்பற்றி தீவிரசனாதனிகள் இளக்காரமாக நினைப்பதுவும் எழுதுவதுவும் நடக்காமல் இல்லை. எது எப்படியாயினும் அத்தவ ஞானியர்களின் சிந்தனைகள் எமது மொழியையும், சிந்தனைகளையும் செழுமைப்படுத்தி உள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. இவர்களின் மெய்ஞான உணர்வும் விஞ்ஞான உண்மைகளும் என்றென்றும் நிலைத்திருக்கும் என்பது மிகையல்ல.

இவ்வாறானவர்களில் ஒருவரான அகத்தியரின் ஞானப்பாடல்களில் சிலவற்றை கீழே தொகுத்துத் தருகின்றோம். புராணங்களில் கூறப்படும் ''குறுமுனியான'' அகத்தியரும், இவர்களும் ஒருவரா? அன்றி வேறானவரா? என்பதில் சான்றோர்களிடம் அபிப்பிராய பேதங்கள் உண்டு.

## அகத்தியர் ஞானம் - 1

சத்தியே பராபரமே ஒன்றே தெய்வம்
சகலவுயிர் சீவனுக்கு மதுதா னாச்சு
புத்தியினாலறிந்தவர்கள் புண்ணியோர்கள்
பூதலத்தில் கோடியிலே யொருவ ருண்டு
பக்தியினால் மனமடங்கி நிலையில் நிற்பார்
பாழிலே மனத்தை விடார் பரமஞானி
சுத்தியே அலைவதில்லைச் சூட்சஞ் சூட்சம்
சுழியிலே நிலையறிந்தால் மோட்சந் தானே
சத்தியமே வேணுமடா மனிதனானால்
சண்டாளஞ் செய்யாதே தவறிடாதே
நித்தியகர்மம் விடாதே நேமம் விட்டு

நிட்டையுடன் சமாதி விட்டு நிலை பேராதே
புத்தி கெட்டுத் திரியாதே பொய் சொல்லாதே
புண்ணியத்தை மறவாதே பூசல் கொண்டு
கத்தியதோர் சள்ளிட்டும் தர்க்கி யாதே
கர்மியென்று நடவாதே கதிர்தான் முற்றே.

### ஞானம் – 2

உண்ணும் போதுயி ரெழுத்தை வுயிரவாங்கி
உறங்குகின்ற போதெல்லா மதுவே யாகும்
பெண்ணின்பா லிந்திரியம் விடும் போதெல்லாம்
பேணிவலம் மேல்நோக்கி அவத்தில் நில்லு
திண்ணிற்கா யிலைமருந்து மதுவே யாகும்
தினந்தோறும் அப்படியே செலுத்த வல்லார்
மண்ணூழி காலமட்டும் வாழ்வார் பாரு
மறலிகையில் அகப்படவு மாட்டார் தாமே

மூலமதை யறிந்தக்கால் யோகமாச்சு
முறைமையுடன் கண்டக்கால் வாத மாச்சு
சாலமுடன் கண்டவர் முன் வசமாய் நிற்பார்
சாத்திரத்தைச் சுட்டெறிந்தால் அவனே சித்தன்
சீலமுள்ள புலத்தியனே பிரம்ம யோகி
செப்பு மொழி தப்பாமல் உப்பைக்கண்டால்
ஞாலமுள்ள எந்திரமாஞ் சோதி தன்னை
நாட்டினால் சகலசித்தும் நல்கும் முற்றே.

### ஞானம் – 3

பாரப்பா சீவன் விட்டுப் போகும் போது
பாழ்த்த பிணங் கிடக்குமென்பார்
உயிர் போச்சென்பார் ஆரப்பா அறிந்தவர்கள்?
ஆரும் இல்லை ஆகாய சிவத்துடனே சேருமென்பார்
காரப்பா தீயுடன்தீச் சேருமென்பார்
கருவறியா மானிடர்கள் கூட்டமப்பா
சீரப்பா காமிகள் தாமொன்றாய்ச் சேர்ந்து
தீயவழி தனைத் தேடிப் போவார் மாடே

பாடினதோர் வகையேது? சொல்லக்கேளு
பாரத புராண மென்ற சோதி யப்பா
நீடியதோர் நாவணன்தான் பிறக்கவென்று
நிலையான தசரதன் கை வெல்ல வென்று
நீடியவோ ராசனென்றும் முனிவ ரென்றும்
நிறையருள் பெற்றவரென்றுந் தேவரென்றும்
ஆடிய தோர் அரக்கரென்றும் மனிதரென்றும்
பாடினார் நாள்தோறும் பகையாய்த்தானே.

ஞானம் - 4

பூரணமே தெய்வமென உரைத்தாரையா
பூரணத்தை யின்னதென்று புகல வேண்டும்
காரணத்தைச் சொல்லுகின்றேன் நினைவாய்க்கேளு
கலையான பதினாறும் பூரணமேயாகும்
மாரணமா மூலகத்தில் மதிமயங்கி
மதிகெட்டுப் பூரணத்தை யிகழ்ந்தாரையா
வாரணத்தை மனம் வைத்துப் பூரணத்தை
வாசியென்ற சிவயோக வாழ்க்கையாச்சே

பாரப்பா உதயத்தில் எழுந்திருந்து
பதறாமல் சுழுமுனையில் மனத்தை வைத்துக்
காரப்பா பரிதிமதி யிரண்டு மாறிக்
கருவான சுழுமுனையில் உதிக்கும் போது
தேரப்பா அண்ணாக்குள் நின்று கொண்டு
தியங்காமற் சுழு முனைக்குள் ளடங்கும் பாரு
சீரப்பா பதினாறில் எட்டும் நான்கும்
சிதறாமல் மூன்றும் ஒன்றாய்ச் சேர்த்து போமே.

**எங்கள் குலவிளக்காகிய**
**சிவநெறிச் செம்மலும், சமய சமூக சேவையாளருமாகிய**
**த.வ.வி.கதிராமப்போடி அவர்களின் ஆத்ம ஒளிக்குச் சமர்ப்பணம்**

**தொகுப்பு**
**மருமகன், மகள், பேரப்பிள்ளைகள்**
**செ.குருகுலசிங்கம், கு.தவமலர், குருசாமினி, குருசாந்தன், குருசாழினி.**

# இரு மெழுகு எரிந்து அணைந்தன
# ஒரு மெழுகு எரிந்து உருகுது

காலனவன் கடமைதனை உங்கள் காலடிவந்து நிறைவேற்றி விட்டான்
காலனவனுக்கு கருணையில்லை – ஆனால்
என் கவலைக்கோ எல்லையில்லை
நீங்களிருவரும் அடுத்தடுத்து பிரிந்த செய்தி கேட்டு
என் மனமோ ஒரு கணம் கனத்துப் போயின
என் கண்ணீரில் கண்களோ தாழ்ந்து போயின
என் கருணைத் தெய்வங்களே! உங்கள் பிரிவுத் துயரில்
நான் ஒரு கணம் உணர்வற்றுப் போனேன் – ஆனால்
மறுகணம் உணர்வுற்று ஆனேன் – ஏனெனில்
நீங்கள் மீண்டும் ஒரு தடவை எனக்குள்
புதிதாய் பிறப்பெடுத்து விட்டதனால்
எழுந்து எழுதத் தொடங்கினேன் என் ஏக்கங்களை
உங்கள் பேரன் மகனானதால்....

உங்கள் அனுவிலும் உங்கள் வயிற்றிலும்
பிறக்காத குறையொன்றே தவிர – உங்கள்
இருவரின் மடித்தொட்டிலில் வளர்ந்து வாழ்கின்ற
பேரன் மகனானேன்

என் தந்தை அவர் மகன் நாங்கள் தத்துப்பிள்ளையானாலும்
தன்வயிற்றில் பிறந்த தன்பிள்ளை போல்
உங்கள் மடியில் வளர்ந்து வாழ்கின்ற
பேரன் மகனானேன்.

உங்களிருவரின் அன்பையும் பண்பையும்
பாலென மனசில் பருகி பாசமுள்ள
அரவணைப்பில் வளர்ந்து வாழ்கின்ற
பேரன் மகனானேன்

என்னவளே! என்னவனே! எட்டுர் உங்கள் புகழ்பாட
நீங்களோ உறக்கத்திலும் என்னைத் தானே
நெருப்புக்கு பயந்து பஞ்சை பொத்திவைப்பது போன்று
உங்கள் நெஞ்சுக்குள்ளேயே பொத்தி வைத்து வளர்ந்து வாழ்கின்ற
பேரன் மகனானேன்.

என் செடிமுகம் வாடக்கண்டால்
சிதறுமே உங்கள் நெஞ்சம்
அன்னை வடிவனே கூடிவாழ்ந்த உங்களிடமிருந்து
காலத்தின் கதியாலும் கடவுளின் விதியாலும்
சிலகாலம் பிரிந்து வாழ்ந்த
பேரன் மகனானேன்.

உங்கள் பிரிவுதனை என் மனமதோ ஏற்க மறுத்தது
எனக்கு எத்துன்பம் வருகினும் காடுமலை கடந்து
உங்கள் காலடி வந்துசேர
அவரோ கட்டியணைப்பார் அவளோ முத்தம் தருவாள்
அந்தப் பாசப் பிணைப்பில் வளர்ந்து வாழ்கின்ற
பேரன் மகனானேன்.

எத்தனை எவ்வகை பூமலர்ந்தும் அவை வாடிவிடும்
அதில் வாடாத பூவெதுவோ! வளர்கின்ற இடமெதுவோ!
வாடாத பூ இவர்களின் அன்பு
வளர்கின்ற இடம் இவர்களின் இதய இல்லம்
மீண்டும் உங்களிடம் சேர்ந்து வளர்ந்து வாழ்கின்ற
பேரன் மகனானேன்.

சீரோடும் சிறப்போடும் சிரித்த முகத்தோடும்
வாழ்ந்த நான் இன்று உங்களிருவரின் பிரிவினால்
பாலைவன வெயில்தனில்
மெழுகாய் எரிந்து உருகி பரிதவித்து வாழ்கின்ற
பேரன் மகனானேன்.

எத்தனை ஆண்டு சென்றாலும்
இடையிடையே இன்பதுன்பம் வந்தாலும்
இருட்டில் கூட இருளாய் தெரியாது
உங்களிருவரின் திருவுருவமும்

என்னுயிருள்ளவரை
உதிர்ந்து கொண்டேயிருப்பேன் உங்கள் பாதங்களில்
உதிரப் பூக்களாய்.

**அருளானந்தம் பவானந்தன்** (பேரன்) K.S.A.

# என் மனதில் தானாக தோன்றிய தான்தோன்றிலிங்கம் இது

என் தெய்வமே!
மாண்டவர்கள் மீண்டதில்லை
மானிடர் மாயையிது எனை
தூண்டிடும் நினைவலைகள்
துயர் தீர்த்து வைத்திடுமோ?

உந்தன் நெஞ்சத்து நினைவுகளை
நீங்காத நினைவாக்கி
நித்தம் நித்தம் உமை நினைத்து
நான் வெந்து போகின்றேன்
ஒரு தடவை வந்து போங்கள்.

என் பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய் திகழ்ந்து
கண்ணை இமை காப்பது போல்
காத்தது மட்டுமன்றி என்னை
அன்பு வழிநின்று அரவணைத்த தெய்வமே!

உந்தன் பிரிவுத்துயர் என்னைவிட்டு ஆறவில்லை
சிறிதேனும் என் மனத்திரையில் காணுமுன்னை
என் விழித்திரையில் காணத்துடிக்கிறேன்
எந்தன் ஏக்கத்துக்கு இறைவன்
ஆறுதல் தருவான் என நினைத்து

நிலையில்லா வாழ்வுதனில் நிலையாக இருந்தது
யாருமில்லை நானிம் மண்ணகத்தில் இருக்கும்வரை
ஒரு தான்தோன்றிலிங்கமாக நிலைத்து நீயிருப்பாய்
அதுவரைக்கும் நீ ஆண்டவன் அடிபோய் ஆறுதல்கொள்ள
நான் உனக்காக வேண்டுதல் செய்வேன்
இம் மண்ணகத்தில் இருக்கும் வரை.

**திரு.திருமதி. ஜோதீஸ்வரன் - கீதா**
சுவிஸ்

# மரணம்.........!

மாயப் பொய்மைகள் நிறைந்த
மயக்குறு மருளுலகில் – மரணம்
என்னும் மாமனிதனின் உண்மை நிலை
மறுத்தாலும் நமைத் தேடி வரும்
விரும்பியோ விரும்பாமலோ கிடைத்துவிடும்
நிச்சயமற்றவைக்கு எல்லாம்
நிச்சயமான ஒரு நிச்சயம் மரணம்.

இந்த உண்மையை உணராமல்
ஓடுகிறோம்........... ஓடுகிறோம்............
வாழ்க்கையின் எல்லை வரை
தேடுகிறோம் .... தேடுகிறோம்......
சுவை குறைந்து போன உலகில்
சுவையதனைத் தேடுகிறோம்
இது யார் குற்றம்.......?

உண்மை உணராமல் .........
மாயையில் விடியல் தெரிகிறது
நிலத்தில் இருந்து மழை பெய்கிறது
நீரில் தேர் ஓடுகிறது
கருவில் மழலை அம்மா என்றழைக்கிறது
இவையெல்லாம் எப்படி நியாயம்
உயிரற்ற இந்த உலகத்தின்
இன்றய நியதிகள் இவை........

ஒரு வீட்டில் ஜனனம்
மறு வீட்டில் மரணம்
எதிர் வீட்டில் திருமணம் – இப்படி
மும்முனையில் போர் தொடுக்கும்
இந்த உலக பந்தத்தில் – நீ
வாழ்க்கையைத் தேடுகிறாய்
மரணம் உன்னைத் தேடுகிறது.

இந்த உண்மையை உணராமல்
ஆசை எனும் ஆடை அணிந்து
ஆடம்பர வாழ்வை விரும்பி
வெட்டி வீழ்த்த ஆயுதம்....
குழி பறிக்க மண்வெட்டி கொண்டு
வஞ்சனை எனும் பாதையிலே
ஆத்மாக்களின் ஊர்வலம் நடக்கிறது.

சுவை குறைந்த வெற்றுலகில்
ஆசைகளைக் கல்லடுக்கும் மாமனிதா
கால் வலித்து உடல் களைத்து
பொய்யின் நிழலில் தூங்குகிறாய்
அடவி காடுகளும் வெறுந் தரையும்
வெறுமைதனில் எலும்புகளுந்தான்
மிஞ்சுமிந்த மானிலத்தில்
எஞ்சுவதற்கு என்ன உண்டு.

என்பதை நீ உணர்ந்து
சிவநெறியே அறநெறியாய்
தானம் செய்வதே தர்மமாய்
ஆலயம் தோறும் அறப்பணி செய்து
ஊர் கூட்டித் தேர் இழுத்த
கதிராமப்போடி கதிரவனே....
காயப்படுத்தாமல் குருதி பாயாமல்
எங்கள் இதயத்தில் ஒட்டியிருந்த
உன்னை எப்படிப் பிரித்தெடுத்தாய்
எங்களை விட்டு ஏன் மறைந்தாய்.

**திரு.திருமதி. லோகநாயகம் சிவமலர்**
**குடும்பம்**
குருக்கள்மடம்.

# படுவானில் தோன்றிய ஒரு பகலவன்.....

ஏட்டில் எழுத ஒண்ணாம் என் அப்பா உன்புகழை
பாட்டில் கூடப்பாட முடியாது – நாட்டில்
உள்ளமக்கள் சொல்கிறார்கள் உன்பணியின் மகத்துவத்தை
வள்ளலே மீண்டுவந்து பார்,

கொழும்பார் இறந்ததாமே என்று செய்தி கேட்ட மக்கள்
எழுந்தோடி இங்கு வந்து சேர – அழுந்தி
மக்கள் நீ செய்த பணிகளைச் சொல்லியழ
திக்குகளாய்க் கேட்டதே அன்று,

உற்றசுற்றம் என்று நாளும் ஓடியோடி எங்களுக்கு
பற்றோடு பாசமூட்டி வளர்த்தாய் – முற்றும்
முடித்து விட்டு எங்கு சென்றாய் அப்பப்பா என்று நாங்கள்
அடித்துச் சொல்ல ஆர் வருவார் இங்கு,

மருமகள் என்று சொல்ல வாய்வருகுதில்லை என்று
கருவிலே பிறந்த பிள்ளைபோல – உருவத்தில்
மகள் என்றுதானே வாயாரக் கூப்பிடுவீர்
புகழ் தேடித் தந்தெங்கு போனீர்,

பிள்ளைகளைப் பெற்றெடுத்து பிரியமுடன் வளர்த்தெடுக்க
துள்ளித் திரிவீர்களாம் என்று அம்மா சொன்னதெல்லாம்
வள்ளலே கண்முன்னால் வருகிறதே வேதனையாய்
உள்ளத்தில் தைரியத்தைத் தா,

தந்தை தாய் இல்லாத பிள்ளைகளாய் ஆக்கி விட்ட
சிந்தை மிக உயர்ந்த சிவனே – விந்தை
உலகமே மாயை உள்ளதெல்லாம் அவன்படைப்பு
சிலகாலம் இருந்து வாழ்ந்து செல்வோம்,

சீட்டெழுதி வைத்தபடி சிவன் கணக்கை முடித்துவிட்டான்
மாட்டிவிட்டோம் நாங்கள்தான் மாயையிலே – கூட்டில்
உயிர் இருக்கும் காலம் வரை உள்ளத்திலே நேர்மை கொண்டு
மயிர் நீக்கி வாழ்ந்திடாத கவரிமானாய் வாழ்ந்து செல்வோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**திரு.திருமதி.சிவராஜா ராதாராணி குடும்பத்தார்**
**அரசடித்தீவு, கொக்கட்டிச்சோலை.**

# இதயத்தில் பதிந்த உதயநிலா.....

அப்பப்பா உங்களது அழகான திருமுகத்தை
எப்பப்பா நாங்கள் இனி இந்த மண்ணில் காணுவது
பேரப்பிள்ளைகளில் பிரியமுடன் வாழ்ந்த நீங்கள்
தாரத்தின் வழிதேடி தரணிவிட்டு சென்றீர்களோ,

மருமகள் பேரப்பிள்ளை என்றுசொன்னால் உங்களுக்கு
மறக்காத பெயராக வைத்திருந்தீர் மனதினிலே
உருக்கமுள்ள ஒரு உன்னத மனிதர் நீங்கள்
உறவுகளை என்றும் உயிராக மதித்து வாழ்ந்தீர்,

தள்ளாடும் வயதினிலும் தளராத உங்கள் பணி
கள்ளங்கபடமில்லா மனிதரென்று காட்டியது
உள்ளத்தால் பொய்யாத ஒழுக்க சீலராக வாழ்ந்து
உலகத்தின் உள்ளங்களில் நிறைந்துவிட்டீர் தெய்வமாக,

பெற்றபிள்ளை பேரப்பிள்ளை பிரியமுடன் ஈன்றபிள்ளை
உற்றசுற்றம் என்று நாளும் ஓடிஓடி வருவீர்களே
வற்றாத சந்ததியாய் பரம்பரையோ வளர்கிறது
பற்றெல்லாம் துறந்து நீயோ பரமனடி சேர்ந்திட்டாயோ,

ஆலயத்தின் பணியென்றாலே அறப்பணியாய் ஏற்று நீங்கள்
சாலவேண்டிச் செய்திடுவீர் சற்குருவாய் நினைத்து தினம்
வேலிக்காலாய் நின்ற எங்கள் விடிவிளக்கு நீங்கள் அல்லோ
போலி வாழ்க்கை வேண்டாமென்று தானா ஐயா புறப்பட்டீர்கள்.

விலைமதிக்க முடியாத மனிதராக இருந்த நீங்கள்
நிலையற்ற உலகை விட்டு நீங்கி இன்று முப்பத்தொன்று
ஆடவந்தோம் கொஞ்சக்காலம் அவனியிலே பிறப்பெடுத்து
ஆடும் காலம் வரையாவது மனிதராக ஆடிச்செல்வோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**திரு.திருமதி.சிவஞானசெல்வம் பரமேஸ்வரி**
**குடும்பத்தார்**
அரசடித்தீவு, கொக்கட்டிச்சோலை.

# வேராகி.... உளியாகி... விழிகளிலே துளியாகி...

நேற்றென் விழியினிலே விரிந்த பனிமலரே!
இன்றென் அதேவிழியில் வழியும் தனிநிலவே!
பொழியும் மழையாகி ஒளிரும் சுடராகி – இனி
கழியும் நாளிலெல்லாம் வரப்போகும் வழித்துணையே!

பாலைவனத்துக் காலைப்பொழுதினிலே – எனைப்
படர்ந்துவரும் பனிப்புகையே! – தினம்
மாலை வணக்கம் சொல்லியெனைக்
கடந்து போகும் கதிரொளியே!

நாட்கிழித்துப் பாய்ந்தோடும் காலநதியோட்டத்தில்
நாளும் வந்து போகின்றன ஞாபகங்கள்
ஆட்காட்டி அலறியெழும் அர்த்தசாம நேரத்தில்
அடிமனதில் எழுகின்றன பூமுகங்கள்.

மின்னலென தோற்றமுறும் உம் நினைவால் – கண்
யன்னல்வழி பாய்கிறது நீர்வீழ்ச்சி
விண்ணில்விடி விளக்கான பின்னும் கூட – என்
மண்ணில் நீரூப்பீர் வேர்பாய்ச்சி.

வெளியில் தெரியாமல் வெளிச்சம் போடாமல்
மரம்தாங்கி நிற்கின்றன வேர்கள்
பொழியும் சிலைக்காக வலிதாங்கும் அடிவாங்கி
கூர்மழிந்து போகின்றன உளிகள்

அந்த வேராகி... உளியாகி... நாம் நடக்கும் வழியாகி
நல்வழிகள் காட்டிவைத்த உறவே! – உன்
விழுதாகி எழுகின்ற வித்துக்கள் நாம் நாளை
விருட்சமென விண்முட்டி நிமிர்வோம்.

**இப்பொழுதும் அப்பொழுதும் எப்பொழுதும் எம்கூட துணைக்குவர வேண்டிநிற்கும்....**

**உங்கள் பேரப்பிள்ளைகள்**

**ஜீவா, பவானி, பவானந்தம், பகிரதன் (குடும்பத்தினர்)**

# சிந்தனைத் துளிகள்.....

❖ விடாமுயற்சியும் குறிக்கோளும் வெற்றிப்பாதையில் முன்னேற இரு சக்கரங்கள்.

❖ வாழத்தெரிந்தவனுக்கு வரும் சோதனைகள் எல்லாம் பெரும் வேதனைகள் அல்ல. அது இலட்சியப்பாதையின் விடிவிளக்கு.

❖ காலத்தை நீங்கள் வீணடித்தால் பிறகு காலம் உங்களை வீணடித்துவிடும்.

❖ இலட்சியம் இல்லாத மனித வாழ்வு ஆழ்கடலில் துடுப்பு இல்லாத படகு போன்றது.

❖ சோதனைகளை எதிர்கொள்வதில்தான் மனிதனின் சக்தி வெளிப்படுகின்றது.

❖ எதற்காகவும், எப்பொழுதும் உங்களைத் தாழ்த்திக் கொள்ளாதீர்கள். கம்பீரமாக நிமிர்ந்து நில்லுங்கள்.

❖ தாயின் இதயத்திலிருந்துதான் குழந்தையின் கல்வி தொடர்கிறது.

❖ ஒருவரின் உள்மனதை அறிந்து நட்புக்கொண்டால் அவரால் ஏற்படும் பின் விளைவுகளை எதிர்கொள்ள நம்மிடம் சக்தி வேண்டும்.

❖ அன்பு என்பது தானாக வரும் பொருள் விலை கொடுத்து வாங்கும் பொருள் அல்ல.

❖ எதற்கும் அஞ்சாதே, எதையும் வெறுக்காதே, யாரையும் ஒதுக்காதே உன் பணியை நீ ஊக்கமுடன் செய்.

# பஞ்சத்தின் பெருமை

❖ பஞ்ச இலக்கணம் : எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி.

❖ பஞ்ச இரத்தினம் : சுக்ர்தி, பொன், மாணிக்கம், முத்து, மரகதம்.

❖ பஞ்ச காப்பியம் : சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி. குண்டலகேசி, வளையாபதி.

❖ பஞ்சகௌவியம் : தயிர், பால், நெய், கோமயம், கோசலம்.

❖ பஞ்ச பட்சி : ஆந்தை, கோழி, வல்லூறி, காகம், மயில்

❖ பஞ்சபூதம் : நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம்.

❖ பஞ்ச பந்தம் : ஏலம், சாதிக்காய், கற்பூரம், இலவங்கம், தக்கோலம்.

❖ பஞ்ச புலன் : கேட்டல், பார்த்தல், சுவைத்தல், நுகர்தல், தொடுதல்.

❖ பஞ்ச பொறி : கண், மூக்கு, வாய், செவி, தோல்.

❖ பஞ்ச உலோகம் : இரும்பு, செப்பு, ஈயம், பொன், வெள்ளி.

❖ பஞ்ச ஜீவம் : கொல்லாமை, தள்ளாமை, கள்ளுண்ணாமை, பொய் பேசாமை, காமமின்மை.

## மனிதனின் ஆரோக்கியத்திற்கு அவசியமானவை

❖ இருக்க வேண்டியது : அமைதி, தூய்மை, நீதி, நேர்மை, அன்பு

❖ ஆளவேண்டியது : கோபம், நாக்கு, நடத்தை

❖ அடைய வேண்டியது : அத்தம், விடாமுயற்சி, பொறுமை, மனமகிழ்ச்சி

❖ தவிர்க்க வேண்டியது : துன்பம் செய்தல், முரட்டுத்தனம், பொறாமை, நன்றி இல்லாமை.

❖ வணங்க வேண்டியது : இறைவன், தாய், தந்தை, பெரியோர்.

❖ கொடுக்க வேண்டியது : இல்லாதவர்க்கு உதவி, துன்பப்பட்ட நெஞ்சத்துக்கு ஆறுதல், தகுதியானவர்க்குப் பாராட்டு.

## நூல்களும் நூலாசிரியர்களும்

| | | |
|---|---|---|
| திருக்குறள் | - | திருவள்ளுவர் |
| திருமந்திரம் | - | திருமூலர் |
| திருவாசகம் | - | மாணிக்கவாசகர் |
| திருக்கோவையார் | - | மாணிக்கவாசகர் |
| திருப்பொன்னூஞ்சல் | - | மாணிக்கவாசகர் |
| திருவிரட்டை மணிமாலை | - | காரைக்காலம்மையார் |
| திருவாளங்காட்டு மூத்த திருப்பதிகம் | - | காரைக்காலம்மையார் |
| அற்புதத் திருவந்தாதி | - | காரைக்காலம்மையார் |
| இராமாயணம் (மூலம்) | - | வான்மீகி |
| இராமாயணம் (தமிழ்) | - | கம்பர் |
| மகாபாரதம் (மூலம்) | - | வியாசர் |

| | | |
|---|---|---|
| *மகாபாரதம் (தமிழ்)* | - | *வில்லிப்புத்தூரார்* |
| *மகாவம்சம்* | - | *மகாநாமதேவர்* |
| *நன்னூல்* | - | *பவனந்தி முனிவர்* |
| *யாழ் நூல்* | - | *விபுலானந்தர்* |
| *நளவெண்பா* | - | *புகழேந்திப் புலவர்* |
| *நாலடியார்* | - | *சமணமுனிவர்* |
| *பாஞ்சாலி சபதம்* | - | *சுப்பிரமணிய பாரதியார்* |
| *கீதாஞ்சலி* | - | *இரவீந்திர நாத்தாகூர்* |
| *சிந்தாமணி* | - | *திருத்தக்கதேவர்* |
| *சகலகலாவல்லிமாலை* | - | *குமரகுருபரர்* |
| *மதுரைக்கலம்பகம்* | - | *குமரகுருபரர்* |
| *ஆத்திசூடி* | - | *ஔவையார்* |
| *நல்வழி* | - | *ஔவையார்* |
| *தொல்காப்பியம்* | - | *தொல்காப்பியர்* |
| *வெற்றி வேற்கை* | - | *அதிவீரமாபாண்டியன்* |

*தொகுப்பு :*
**கு. குருசாந்தன்** (பேரன்)
தரம் – 12 (2006 A/L Batch)
மட்/சிவானந்தா தேசிய பாடசாலை.

# எண்ணெய்ச் சிந்து

## காப்பு

ஆனை முகனே யரனார் திருமகனே
கானமதம் பாயுமொரு கையோனே – ஞானமுற
வித்தைகற்கும் பிள்ளைகட்கு விக்கினங்கள் வாராமல்
நித்தநித்தம் நீ துணையாய் நில்.

பூமாது நாளும் புகழுமெண்ணைச் சிந்துதனைப்
பாமாது தன்னருளாற் பாடவே – யாமோது
செம்பொற் கதிரைநகர்ச் செல்வனுக்கு முன்பிறந்த
கம்பக் கரிமுகத்தோன் காப்பு.

செந்திருவைச் சேரலாஞ் செந்தமிழைப் பாடலாம்
இந்திரனைப் போல்வாழ்ந் திருக்கலாம் – சுந்தரஞ்சேர்
வெற்பகத்தை யூடறுத்த வேலவர்க்கு முன்பிறந்த
கற்பகத்தைக் கைதொழுதக் கால்.

## கணபதி துதி

சீரார் கனியெண்ணெய்ச் சிந்துதனை யான்பாடக்
காரானை மேனிக் கணபதியே முன்னடவாய்
அந்தி மதிசூடும் அரனார் திருமகனே
கந்தருக்கு முன்பிறந்த கணபதியே காப்பாமே.

## சிவன்

முன்னாளி லாகமத்தில் மூதுணர்ந்தோர் சொன்னபடி
இன்னாளி லெண்ணெய்ச் சிந்துதனை யான்பாட
வண்ணத் தமிழ்ப்புலவர் வரைந்து குற்றம் பேசாமல்
பெண்ணை யிடம் வைத்த பிஞ்ஞகனார் தாள்துணையே.

## பரமேஸ்வரி

சோதி யெண்ணைச் சிந்துதனைத் தொல்புவியில் யான்பாட
ஆதிபர மேசுவரி யம்மையிரு தாள்துணையே.

## சுப்பிரமணியர்

எத்தி யெருதேறும் ஈசனார் தாம்பயந்த
அத்திக் கிளைய அறுமுகவன் தாள்துணையே
பற்றி யசுரர் தம்மைப் பணிவாக வேரறுத்து
வெற்றி மயிலேறும் வேலவனார் தாள்துணையே.

## சரஸ்வதி

சால நமஸ்கரித்தேன் சரஸ்வதியே யுந்தனையும்
வால சரஸ்வதியே வந்துகவி செய்யுமம்மா
பால சரஸ்வதியே நாவதனில் வந்திரம்மா
ஞால சரஸ்வதியே வாக்கருள வேணுமம்மா
வாணி சரஸ்வதியே வரமருள்வாய் என்தாயே
பேணி யுனைநடப்பேன் பெற்றவளே காருமம்மா
நாவு தவறாமல் நல்லவரந் தந்தருள்வாய்
பாவிலே நீயிருந்து பண்பாய் நடத்துமம்மா

## நூல்

ஏடு தவறாமல் எழுத்தாணி சாயாமல்
கோடு தவறாமல் குற்றமொன்றும் வாராமல்
அத்தி முகத்தோனே அரனார் திருமகனே
சத்திக் கணபதியே சண்முகனே காத்திடுவீர்
எண்ணைய்ச் சிந்துதனை எளியேனுரைத் திடவே
அன்னையரே தந்தையரே ஆதரவாய்க் கேட்டிடுவீர்
வண்ணத் தமிழ்ப்புலவர் வரைந்துகுற்றம் பேசாமல்
இந்நாளில் சிறியேன் எண்ணெய்த் தமிழ்ப்பாடல்
பாட வறியேன் பயனறியேன் பாருலகில்
நாடி யுரைக்கலுற்றேன் நல்லகவி வாணர்முன்பு
இந்த எண்ணைய்ச் சிந்தையெல் லோரும்கேட் டிருந்தால்
கன்ம வினையகன்று காசினியில் வாழ்ந்திடுவார்
தன்ம மிகப்பெருகும் சந்ததிக ளீடேறும்
பொன்னனைய மாதாவே போதவே கேட்டிடுவீர்
அன்னையொடு தந்தை யரிய பிறவிகளே
பெற்ற வரலாற்றைப் பெருமையுடன் பேசுகின்றோம்

சற்று மனதிரங்கித் தயவாக நீர்கேளும்
முன்னாளிலே பயனும் முக்கணனு மனமகிழ்ந்து
இந்நாளிலே சென்ம மீடேற வேணுமென்று
பூமிதனை வகுத்துப் பிறப்பித்தார் சீவசெந்து
ஆமிது மெய்யென் றறிந்துநீர் மாதாவே
இந்தப் பிரகாரம் இருக்குமந்த நாளையிலே
மைந்தரில்லையென்று மனதுமிகச் சோர்வடைந்து
எத்தனை செல்வ மிருந்தாலு மிப்புவியில்
புத்திரச் செல்வம் புவிமீதில் வேணுமென்று
எந்தை பரமேசுவரி யிரக்கம் புரிந்தருளத்
தந்தையரும் நீரும் தயவுகொண்ட நாளையிலே
மைந்தர்பெற வேண்டுமென்று விரும்பித் தபசுபண்ணி
அந்தமுட னெங்களுக்காய் அரிய தபசுபண்ணிச்
சிந்தை மகிழ்ந்து பெற்ற செய்திகளைச் சொல்லுகிறோம்
நன்மையுள்ள மாதாவே நாடிநீர் கேளுமெல்லாம்
தன்மையுட னெங்களை நீர் தயவாய் பெறவேண்டி
ஆராயும் வேதமுட னைந்தெழுத்தை யும்நினைத்து
நேராத கோயிலெல்லாம் நேர்ந்து தவசுபண்ணிக்
கும்பிடாக் கோயிலெல்லாம் கும்பிட்டுத் தெண்டனிட்டு
நம்பிடாக் கோயிலெல்லாம் நயந்துமே செப்பனிட்டு
அன்னம் வழங்கி யரிய தவசுபண்ணிப்
பொன்னுடனே வஸ்த்திரமும் போதவே தானளித்துச்
சோகம் பெரிதாய்த் துயரடைந்தீ ராதலினால்
தாகமுட னெங்கள் தம்பிரான் கண்டருளிச்
சித்த மிரங்கிச் சிவனுமுமை யாளும்
மெத்த மகிழ்ந்து விடையோ னுமக்கருளக்
கும்பியினில் வந்துதித்த கொள்கைகேள் மாதாவே
அம்புவியின் மீதெழுந்த அறுகுநுனிப் பனிபோலச்
சிறந்தைந்தாம் நாளில் சிறுபுன்னைப் பூப்போல
நிறைந்தபதி னைந்தாம் நாள் நீர்க்குமிழி போலாகி
ஐயாறு முப்பது நாள் அடைவுடனே சென்றபின்பு
பொய்யாமற் கோழிமுட்டை போற்றலையு முண்டாகித்
திங்கள் அணிந்த சிவனார் கிருபையினால்
உங்கள் வயிற்றில் உற்பவித்தோம் மாதாவே
உற்பவித்த நாள்முதலாய் உங்கள் வருத்தமது
கெற்பச் சுழற்சி கிறுகிறுப்பு முண்டாகிப்

பித்தமது கக்கிப் பெரிய துயரடைந்து
சத்தி யருவருப்புத் தாங்கமுடியாமல்
புத்தி மயங்கிப் புவிதனில் தான்வீழ்ந்து
நித்திரை கலைந்து நினைவு தடுமாறி
வெற்றிலை பாக்கு விரும்பியருந்தாமல்
பற்றிலையோ வென்று பரனேயென வழுதீர்
சோறு மறந்தீர் சுகிர்தம் பலமறந்தீர்
வேறு வினைகளின்றி மெத்த மனஞ்சலித்தீர்
திங்கள் நுதலாளே செப்பரிய மாதாவே
சங்கரன் தன்னருளாற் தாரணியோர் தாமறிய
மற்ற மாதத்தில் மாதவிடாய் வாராமல்
சுற்றமுடன் நீங்கள் சூழ்ந்திருக்கு மந்நாளில்
ஆலிலை போலே யமர்ந்த வயிறதுவும்
சாலமுட னோங்கித் தளிர்த்து வளர்ச்சியதாய்
ஆக வொருமாதம் அனைவோரு மங்கறியப்
போகமுடன் நீங்கள் புகழ்ந்திருக்கு மந்நாளில்
மாத மிரண்டு வளமாய் நிரம்பியபின்
வேதனைகளாகி மெத்த வருத்த முற்றீர்
மூன்று மாசத்தில் முறைமையுள்ள மாதாவே
தோன்றுஞ் சுடர்காய்த்து சொகுசாய்ப் புளியருந்தி
நாலு மாசத்தில் நஞ்சுண்ட கெண்டையைப் பொல்
பாலுஞ்சுரக்கப் பகற்பொழுது தூக்கமதாய்
அஞ்சு மாசத்தில் அரைவயிறு விள்ளையதாய்
விஞ்சு முலைகறுத்து விம்மியே பால்சுரக்க
ஆறு மாசத்தில் அருமையுள்ள மாதாவே
கூறு பிணிகள் கொண்டே மயக்கமுற்றீர்
ஏழு மாசத்தில் எங்களுடைய மாதாவே
தோளும் இடப்புறமும் தொப்பூளும் தான்வீங்கி
எட்டு மாசத்தில் எடுத்தடி வைக்கொணாமற்
திட்டி தனி லிடறிச் சிவனேயென வழுதும்
ஒன்பதாந் திங்களில் மேலுவமயில் மாதாவே
துன்ப மிகவாகித் தூங்கி யெழுந்து நின்றும்
வாசற் படிகடக்க மாட்டாமனீ ரிருந்தும்
பேசப் பெலன்குறைந்து பெரிய துயரமுற்று
வாயு மிகுந்தே வயிறுநோ வுண்டாகித்

தூய வுடம்புதனில் றுயரடைந்தீ ராதலினால்
எண்ணெய் குளிகை இதமான சூரணமும்
வெண்ணையொடு நீங்கள் பரிகாரஞ் செய்த பின்பு
பத்து மாதத்திற் பரிவுடைய மாதாவே
மெத்த வயிறுநொந்து மெய்யு நடுக்கமுற்றீர்
நாதன் அருளாலே நல்லதிரு நாளதனில்
வேதன் அருளாலே மென்மேலும் நோக்காடாய்க்
கூடும் புவியுதிக்கக் குறிகண்டு நோகுதென்று
ஓடி மருத்துவத்தை யொருநொடியிற் றானழைத்துக்
கூடி வருகையிலே கூவென்று தானழுதீர்
தாயும் தமரும் சகோதரியுந் தற்சூழ
ஆயும் மருத்துவிச்சி யஞ்சாதே யென்றுரைக்க
காலுக்கு நிற்பாரும் கைதாங்கி நிற்பாரும்
மேலுக்கு நிற்பாரும் வேதனையோ வென்பாரும்
தேவதைக்கு நேர்வாரும் தெய்வமே யென்பாரும்
நோவதைக்கு தென்று நுவன்று சலிப்பாரும்
மந்திரங்களாலே வலாற்காரஞ் செய்வாரும்
தந்திரங்களாலே தளர்வாற்றி நிற்பாரும்
இந்தப்படியாக இவர்களெல்லாம் நிற்கையிலே
அந்தப் பேர்மாயன் மழுவினாற் றள்ளிவிடப்
பன்னீர்க் குடமுடைந்து பாலன் பிறந்திடவே
நன்னீமை கொண்டு நயந்துநயந் தெல்லோரும்
பெண்பிள்ளை யல்லவிது பேருலகில் எங்களுக்கு
ஆண்பிள்ளை யென்றே யகமகிழ்ந்து கூரைதட்டி
வாயார வாழ்த்தி வரிசையுடன் கோலெறிந்து
தாயார் மருத்துநங்கை தவிடுகொண்டு தான்புரட்டி
மஞ்சன நீராட்டி மணிமூக்குத் தான்பிடித்து
அஞ்சனந் தீட்டி அலங்காரப் பொட்டுமிட்டுச்
சடுதியுட னெடுத்துத் தாயார் மடியில் வைத்து
உடுபுடவை தன்னாலே உள்ளீரந் தான்துடைத்துக்
காட்டில் மருந்துங் கடைச்சரக்கும் தானெடுத்து
ஊட்டிநோய் தீர உவப்பாக வேபருக்கி
எங்கெங்கு மோடி இரக்கமுடன் பால்வாங்கிச்
சங்குதனில் வார்த்துத் தயவாய்ப் பருக்கியதும்
கண்ணூறு நாவூறு அத்தனையும் வாராமல்

வெண்ணீறு கொண்டு மெய்யில் மிகப்பூசி
வேப்பிலையினாலே மிகுபுகையும் தான் காட்டிக்
காப்பணிந்தே அஞ்சாங் கணக்கில் மருங்கைசெய்து
பன்னிருநாட் சென்றே பலபேருந் தான்கூடி
இன்னிதமா யெங்களுக் கேற்றமருங்கை செய்து
சாணை யுதறித் தயவாய் மடியில் வைத்துப்
பேணிவளர்த்தீரே பிரியமுள்ள மாதாவே
முப்பதுநாளெண்ணி முடிந்தமறு நாளையிலே
செப்பமுட னெங்கள் சிரசின்மயிர் களைந்தும்
வெற்றிலை பாக்கும் மிகவருந்தல் தான்மறந்தும்
நித்திரையு மற்றே நினைவுந் தடுமாறி
ஓராட்டிச் சீராட்டி யுள்ளம் மிகமகிழ்ந்து
தாலாட்டுஞ் சொன்னீரே தாயாரே எங்களுக்கு
அங்கையி லேந்தி யணைத்து மடியில்வைத்து
மங்காமல் முத்தமிட்டு மகனே யெனப்புகழ்ந்து
மெச்சி மடியில் வைத்து மென்மேலும் முத்தமிட்டு
உச்சியுல ராமல் உகந்துநீ ரெண்ணைய் தப்பிக்
கட்டெறும்பு சிற்றெறும்பு கடியதேள் மூட்டையிவை
திட்டமுட னென்றும் தீண்டா தெமைவளர்த்தே
குடிவிளங்கவந்த குமாரனெனத் தாமகிழ்ந்து
விடிவிளக்கும் வைத்தீரே விளங்கிரண்டு மாதமதாய்
உடும்பு பிடிக்குதென்று உவந்து கந்து கொண்டாடிக்
குப்புற வீழ்ந்து குலாவித் தவழ்ந்துவந்து
செப்பமா யுன்மடியிற் சேருகின்ற வேளையிலே
ஏந்தியே தானெடுத்து என்மகனே யென்று சொல்லி
பெற்றெடுத்த வுங்கள்மனம் பெருகத் தனிமகிழ்ந்து
அன்னமு மூட்டி அரைவயதானபின்பு
தன்னையறிந்து தவழ்ந்து விளையாடிச்
சப்பாணி கொட்டுவித்துச் சாஞ்சாடத்தான்பயிற்றி
வைப்பாக நாங்கள் வளர்கின்ற நாளையிலே
தத்தடி வைத்துத் தடக்கி நடந்தோடி
மெத்த விரும்பி விளையாடு மந்நாளில்
ஆண்டொன்று சென்று அடியூன்றிக் கால்மிதித்துத்
தூண்டி நடைபயிற்றிச் சொற்பழக்கி எங்களையும்
சிற்றாடை சாத்திச் சிறுசதங்கை தானணிந்து

முத்தாரம் பூட்டி முழுவயிரத் தண்டையிட்டு
காறை யணிந்து கைக்கு வெள்ளிக் காப்புமிட்டு
வேறு சிறுவருடன் விளையாட்டுப் பார்த்திருந்து
மதலை மொழிகேட்டு வாவென்று தானழைத்துக்
குதலை மொழிகேட்டுக் கோலமது கண்டிருந்து
கண்ணூறு நாவூறு காற்றணவு வாராமல்
வெண்ணீற்றினாலே வினைதீர்த்தாய் மாதாவே
அஞ்சுவய தானமட்டும் அன்னையரே எங்களைநீர்
கொஞ்சி வளர்த்தீரே குறையொன்றும் வாராமல்
கற்றோர் பெரியோர் கலையறிந்த மாமறையோர்
உற்றாரும் மற்றோரும் உறவுமுறை யானவரும்
எல்லாருங் கூடி யெங்களை மூடரென்று
சொல்லாமல் நீங்கள் கலைபயிற்றவே நினைந்து
பள்ளிக்கு வைக்கும் பருவமிது வென்றறிந்து
பிள்ளைக்குக் கல்வி பிரியமுடன் பயிற்ற
உள்ளம் மகிழ்ந்து உவப்பாய் மனமகிழ்ந்து
வெள்ளிக் கிழமையிலே வேளையுள்ள நாழிகையில்
இன்பம தான இரேவதி நடசத்திரத்தில்
ஒன்பது கோளும் உறவுசெய்யும் வேளையிலே
தெள்ளதமி ழறிந்த தேசிகரைத் தானழைத்து
உள்ள முறையாக உபாத்தியாய ரைத்தொழுது
எங்கள் பிள்ளைதனை இணக்கமுடன் நீருகந்து
பங்கமில்லாக் கல்வி படிப்பிக்க வேணுமையா
நல்லதென் றுபாத்தியாயர் நயப்புடனே எங்களுக்குத்
தொல்லையில் லாக்கல்வி தோன்றுவிக்க வேணுமென்று
பட்டைப் புனைந்து பரிவாய் அலங்கரித்து
சட்டையுமிட்டுத் தலைப்பாவும் தானணிந்து
செம்பொன் னரைஞாண் சிறப்பாய் இடுப்பிலிட்டு
அம்பொன் மயிர்கோதி அழகாய் முடித்தபின்பு
பக்தி யுடனே பரிவாய்த் தரைமெழுகி
சித்திக் கணபதியைச் சரசுவதியையும் நிறுத்தி
பிள்ளையார் செய்து பெரியவிளக் கேற்றிவைத்து
வெள்ளித் தைலாவில் வெற்றிலையும் பொற்பணமும்
அள்ளிக் குவியல் செய்து அன்பாயரி செடுத்து
பிள்ளையார்க் கென்றே பெருத்த நிறைகுடமும்

வெற்றிலையும் பாக்கும் விரும்பிய பூகரும்பும்
தெள்ளிய மோதகமும் சீனிகண்டு சர்க்கரையும்
வாழைப் பழமும் மாங்கனியுந் தீஞ்சுளையும்
வேழ முகத்து விநாயகர்க்கு முன்குவித்து
ஐங்கரற்குப் பூசை யன்பாய் முடித்தபின்பு
அரிச்சுவடி தானெழுதி யரிநமோ வென்றுரைத்து
ஓதினார் பாடம் உபாத்தியாய ரெங்களுக்கு
நீதி முறையாய் நிலவெழுத்துந் தான் பழக்கி
அரிவரி யிலக்கணம் ஆனவெழுத் தத்தனையும்
பரிவாக நாங்கள் பயின்றுவரு மந்நாளில்
சாயும் பொழுது தரையிலே பேரெழுதி
நேய முடனே நிதமும் மனமகிழ்ந்து
வாயிற் கணக்கும் வகையான பெயர்க்கணக்கும்
தேசக் கணக்கும் சிறப்பான நாட்கணக்கும்
எண்ணற் கணக்கும் எழுத்துப் பிரிவுகளும்
உண்மைப் படியே உபாத்தியாய ரெங்களுக்கு
ஆத்திசூடி கொன்றைவேந்தன் அன்பான மூதுரையும்
நேர்த்தியாய் நன்னெறியும் நல்வழியும் நாம்படித்தோம்
உரிச்சொல் திவாகரமும் உண்டான நன்னிகண்டும்
மாடேறு மீசுரனார் மாலைகளுந் தான் படித்தோம்
அன்றுதொடுத் தின்றளவும் அன்பாக வெங்களையவர்
நேசித் திருந்து நிதமுமது தொழிலாய்
உள்ளபடி யெல்லாம் உவந்துதந்தார் மாதாவே
பாடாயிரம் பட்டார் பார்க்க வொண்ணா மாதாவே
எங்களுக்காக இப்பாடு பட்டதினால்
திட்டமுடன் ஐயர்மனம் தேற்றவே வேணுமென்று
ஆன புதுவருடம் அடுத்த விடுதலைக்கு
மானமுள்ள தேசிகர்க்கு வருங்கூலி வாங்கவந்தோம்
அரிசிபணம் சீலை அடைவுடனே தான்வாங்க
பரிசினுடன் நீர்வாழும் பதிக்குவந்தோம் மாதாவே
வாசித்துத் தந்தகடன் வைத்திருத்த லாகாதே
ஓதுவித்தகாசில் ஒருகாசு சிக்கிநின்றால்
பாதிவித்தை தானும் பலியாது மாதாவே
ஏட்டுச் செலவுதன்னை இல்லையென்ற பிள்ளைகள்தான்
மோட்டுத் தனப்படுவார் முறைமையிது மாதாவே

மாதப் பணமும் வயிற்றுப் படியரிசும்
போதக் கொடுத்தாற் புகழுண்டு மாதாவே
ஆன சனிக்கிழமை யரிசியெண்ணெய் தண்டவந்தோம்
சனியெண்யெண்க் கென்றவந்தோம் தாயே சலியாதே
இனி யெண்ணெய் இல்லையென் றேதும் உரையாதே
வருத்திப் படிப்பித்த வாத்தியார் தன்கூலி
பொருத்த முடனிருந்தாற் புண்ணியமுண் டுங்களுக்கு
செல்வப் பொருள்தான் சிலவேளை யழிந்துவிடும்
கல்விக் கிணங்கியதோர் கைப்பொருளு மில்லையம்மா
செல்வக் குமாரரெல்லாஞ் சேரவே வந்து நிற்க
முத்துக் குமாரரெல்லாம் முற்றத்தே வந்துநிற்க
பவளக் குமாரரெல்லாம் பந்தலின்கீழ் வந்துநிற்க
அருமைக் குமாரரெல்லாம் அருகிலே வந்துநிற்க்
பார்த்து மிருக்கிறீரோ பாலகனார் தன்சிறப்பை
உச்சி துடிக்குதம்மா உள்ளங்கால் வேகுதம்மா
பிச்சிகளோ நீங்கள் பின்னிரக்க மில்லையம்மா
கால்கை கடுக்குதம்மா கமலமுகம் வாடுதம்மா
மேல்கள் வலிக்கதம்மா வெயிலில் உருகுதம்மா
மேனிநடுங்குதம்மா வெகுசோகமாகுதம்மா
வேர்த்துச் சொரியுதம்மா வெந்நீர் குளித்தாற்போல்
பார்த்து நிற்கலாமோ பாலர் படுந்துயரம்
தண்ணீர்விடா யாகுதம்மா தாகமிகத் தோணுதம்மா
கண்ணீர் சொரியுதம்மா கரங்கள் கடுக்குதம்மா
வயிறு பசிக்குதம்மா வாயாவி கொள்ளுதம்மா
தயிரு மிளநீரும் தாருமம்மா தாயாரே
ஈனா மலடிகளோ இரக்கமில்லாப் பாவிகளோ
தானா யிரங்காமல் தாட்சணிய மற்றீரோ?
மாணிக்கம் முத்து வைரம்வை டூரியம்
காணிக்கை யிட்டுக் கதிரவனைப் போற்றிசெய்து
பேணி வளர்த்துப் பேறுபெற வேணுமென்று
வாணிபங்கள் செய்து மருந்த குறையாமல்
கூலிக்குச் செய்யாமல் கொள்ளையிட்டுத் தின்னாமல்
வேலிக்கு முள்ளுவெட்டி வீணனாய்ப் போகாமல்
கள்ளனாய்ப் போகாமல் காவாலி யாகாமல்
சுள்ளி விறகெடுத்துச் சுமைதலைமேல் வையாமல்

பள்ளிக் கொளித்துப் பரதேசம் போகாமல்
உள்ளபொருளழிக்க உகந்து குடியாமல்
ஆடுகள் மேய்த்து அலைந்து திரியாமல்
மாடுகள் மேய்த்து மடையனாய்ப் போகாமல்
கப்பலி லேறி கலாபசுபற்றி யுண்ணாமல்
இப்புவியில் எங்களை யேனையோ ரேசாமல்
சூது விளையாடிச் சுகமிழந்து போகாமல்
மாதர்பின்னே சென்று மயங்கித் திரியாமல்
ஓடு தனையெடுத்து யாசகியாப் போகாமல்
கூடுஞ் சபையைக் குலைக்க நினையாமல்
வெய்யிலிலே நின்று வெகுவேலை செய்யாமல்
பொய்க ளுரைக்காமல் பெரியோரை யேசாமல்
வம்பனென்று கேளாமல் வகைமோசஞ் செய்யாமல்
நம்பின பேருக்கு நான்துரோகஞ் செய்யாமல்
அண்டின பேரை யடுத்தடுத்துக் கெடுக்காமல்
என்றுஞ் சபை தனிலே யேமாந்து நில்லாமல்
சும்மா திரிந்து சுணங்கனாய்ப் போகாமல்
இம்மாத்திரமு மில்லாமல் எங்களைநீர்
பள்ளிக்கு வைத்துப் பலகலைக ளோதுவிக்க
அள்ளிக் கொடுத்தோ அநேகஞ் செலவழித்தீர்
ஆகையால் நாங்கள் அறிவுநூல் கற்றதனால்
பாகனைய தாயாரே பரிவுடைய மாதாவே
ஈனமிகப் பேசாமல் எங்களுடை மாதாவே
பச்சரிசி தேங்காய் பணமோடு வெள்ளிலையும்
இச்சையுடன் நீங்கள் இதமாய் மனமகிழ்ந்து
இஞ்சி மிளகுடனே ஈருள்ளி வெங்காயம்
மஞ்சளிரு சீரகமும் மணக்கும் பெருங்காயம்
பாகற்காய் தேங்காய் பயத்தங்காய் கத்தரிக்காய்
ஆக விவைமுதலாய் அன்பான பூசணிக்காய்
உப்பு மிளகாயும் ஊறுகாய் தன்னுடனே
குப்பியில் எண்ணெய் கொண்டுவந்து வார்த்துவிடீர்
வேட்டி சவுக்கம் விதமான வஸ்திரங்கள்
நாட்டமுடன் ஈந்தால் நயமுண்டு மாதாவே
நாடி நடந்து நலிந்து துயரமுற்று
வாடி மிகநொந்து வருந்துகிறோம் மாதாவே

பாலர் படுந்துயரம் பார்க்கிலையோ மாதாவே
வால இளங்குமரர் வருந்துகிறோம் ஆச்சியரே
பாடம் படித்துப் பழம்பாட மொப்புவிக்க
ஓடிவரச் சொன்னார் உபாத்தியாயருக் கென்னசொல்வோம்?
பொன்னும் பொருளும் மிகும்போ தழிந்துவிடும்
அன்னையரே கல்வி யழியா தொருநாளும்
கல்விக்கி ணையாகக் கனதேட்ட மில்லையம்மா
செல்வமென்னுங் கல்வி மிகச்சேரத் தாருமம்மா
வீட்டிலெண்ணெ யில்லாட்டால் விடுகாசு மில்லாட்டால்
கேட்டுக் கடன் வாங்கி கிருபையுடன் தாருமம்மா
வந்தும் வெகுநேரம் வருந்தா தனுப்புமம்மா
எங்கள்குரு வானவர்தர னிந்நேரம் பார்த்திருந்து
வெங்கண் சிவந்து வெகுகோபம் கொண்டிருப்பார்
இன்னுஞ் சற்றுநேரம் இவ்விடத்தில் நின்றுவிட்டால்
பழம் பாடம் சொல்கிறதும் பாங்காய் எழுதிறதும்
அன்னையரே கல்வி யடைவுடனே சொல்கிறதும்
தவறில் எங்களுக்குத் தான்செய்யும் ஆக்கினைகேள்
காதிற் பிடித்துக் கடுகெனவே கிள்ளிடுவார்
மோதிப்பிடித்து முதுகின்னேற் போட்டிடுவார்
கொட்டான் பிரம்பாலே கூப்பிட் டடித்திடுவார்
நெடிய பிரம்பாலே நீட்டி யடித்திடுவார்
கட்டி யுருட்டிக் கடுவெயிலிற் போட்டிடுவார்
கட்டி யடித்துக் கனதண்டஞ் செய்திடுவார்
கூட்டோடு பொல்லாக் கொடிய முசுறுதனைப்
போட்டிடுவா ரெங்கள் பொன்னான மேனியிலே
பாட்டைப் படித்துப் பழம்பாடஞ் சொல்லாட்டால்
சாட்டையெடுத்துச் சடசடென வீசிடுவார்
பாடங் கொடாதிருந்தால் பாராமல் எங்கள்முகம்
வாடாநீ யென்று வலுவாய்ப் பிடித்திழுத்து
நெற்றியிலே கல்லுவைத்து நேர்கதிரோன் முன்பாக
ஒற்றைக்காலில் நில்லென்று உறுக்கி யடித்திடுவார்
துரும்பெடுத்து நீங்கள் தொட்டிடா மேனியிலே
அறிவைப் புகட்டுதற்கு ஆக்கினைகள் செய்திடுவார்
பள்ளிக்கொளித்தாற் பதறப் பிடித்துவந்து
கொல்லுவே னென்று கோபித் தடித்திடுவார்

கட்டளை யிட்டபடி கருத்தாய்ச் செய்யாக்கால்
திட்டமுடன் எங்களைச் சினந்துறுக்கி யேயடிப்பார்
நேரமது சென்றாக்கால் நெற்றிதனிற் கல்லேற்றி
வாரிச் சவுக்கெடுத்து வளமாகத் தான் பிடித்து
வீசியடித்திடுவார் மெய்யுதிரங் கொப்புளிக்க
கூசி நடுங்கிக் கூவென் றழுதிடுவோம்
அன்றியே யத்துயரம் ஆற்றாது மாதாவே
பன்றிச் சுருக்கிட்டுப் பதைபதைக்கப் போட்டிடுவார்
சிரந்தனிலே யெண்ணையிட்டுச் சீவி முடிதரித்து
சேறணிந்த கையாற் றிருமுகங்கள் சுத்திபண்ணி
நீறணிய வில்லையென்று நிட்டூரம் செய்திடுவார்
நாவழித்துப் பல்விளக்கி நாளும் வராதிருந்தால்
கூவென்று நாங்கள் கூச்சலிடத் தானடிப்பார்
பள்ளியில் நாங்கள் படுந்துயரம் மாதாவே
உள்ளபடி உரைக்க உள்ளம் கரைந்தழுவீர்
மாதண்டம் பண்ணி மகாகொடுமை செய்திடுவார்
கோதண்டந் தன்னில் கொண்டுபோய்த் தூக்கிடுவார்
ஆதண்டம் என்னுயிரும் ஆகாசம் போயிடுமே
ஏதென்று கேட்பவர்யார் எமையீன்ற மாதாவே
அல்லும் பகலும் அனுதினமும் நம்வீட்டில்
பாடம் படியா திருந்தால் பள்ளிக் கொருநாளும்
வரவேண்டா மென்று வசைசொல்வார் மாதாவே
படிக்கும் பொழுது பார்வையிட்டு எங்களையும்
நடுக்க மெடுக்க நயந்தடிப்பார் மாதாவே
கணக்குப் பிழையிருந்தால் கதறவே தானடிப்பார்
முற்றும்பொய் தானுரைத்தால் முதுகிற்றோல் வாங்கிடுவார்
உபாத்தியாயர் சற்றே மனமிளகி விட்டாலும்
சட்டம்பி யென்னும் சண்டாள மாபாவி
சற்று மிரக்கமின்றி சாடைகள் சொல்லிடுவான்
குற்றங்கள் கூறிக் கொடுமைகள் செய்திடுவான்
வழியில் விளையாடில் வகைமோசஞ் செய்திடுவான்
பழிகள் மிகக் கூறி பங்கங்கள் செய்திடுவான்
தலையிலே குட்டிடுவான் தழும்புபெற நுள்ளிடுவான்
அம்மாவே தாயாரே அரிய பிறவிகளே
சும்மா நாம்நின்று சுணங்குவது நீதமன்று

மலடி யறிவாளோ மக்கள் அருமைகளை
ஈதல்லா லுங்களுக்கு இன்னமும் சொல்வோம்கேள்
பூதலத்தை நம்பிப் புகழ்ந்து மனமகிழ்ந்து
தீதற்ற செல்வம் சிறப்பாய் மிகப் பெறினும்
காதற்ற வூசி கடைவழிக்கு மாகாது
வண்ணான் தன்கூலி மருத்துவிச்சி தன்கூலி
அண்ணாவியின் கூலி ஆனபண் டிதன்கூலி
உற்றகலை யோதுவிக்கும் உபாத்தியாயர் தன்கூலி
நற்றிறமாய் வேலைசெய்யும் நாவிதன் தன்கூலி
இத்தனைபேர் கூலிகளை இல்லையென்றால் மாதாவே
மெத்த நரகுதன்னில் வீழ்த்திடுவார் மாதாவே
ஆகாது நீங்கள் அநியாயம் செய்தாக்கால்
போகாது தோஷம் பூதலத்தில் மாதாவே
ஆகையா லெங்கள் அறிவுடைய மாதாவே
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள பழமொழிகாண் மாதாவே
வெண்ணீறு மைந்தெழுத்தும் வேதா கமமுறையும்
கண்ணீறு மில்லாக் காசினியில் வாழ்ந்திடுவீர்
மாரி பொழிந்து மகிதலமுந் தான் வாழி
ஊரிலுள்ள பெரியோர்கள் உயர்ந்து நிதம்வாழி
அன்னம் பெறுவீ ரரியதவம் பெறுவீர்
சொர்ன்னம் பெறுவீர் சுகங்களெல்லாம் நீர்பெறுவீர்
இன்னம் பெறுவீர் எங்களைப்போல் மைந்தர்களை
எந்தன் குருவாழி ஈன்றெடுத்த தாய்வாழி
தந்தை மிகவாழி சான்றோர் மிகவாழி
எந்தை கிளைவாழி ஈன்றோர் மிகவாழி
பாடினோர் வாழி படித்தோர் மிகவாழி
ஏடு பிடித்து எழுதினோர் தான்வாழி
மாதமும் மாரி மழைபொழிய மானிலத்தில்
ஆல்போற் றழைத்து அறுகதுபோல் வேரூன்றி
மூங்கில்போற் கூட்டம் முசியாமல் வாழியவே.

– முற்றிற்று –

*தொகுப்பு*
**இராசதுரை - சிறீவாணி**
அம்பாள் அரிசி ஆலை.

# அன்புச் சுரங்கம்

வெண்பா

மென் பஞ்சு இதயத்தால் தன்சேவை யாற்றவே
மண்ணுக்கு வந்ததோர் தெய்வம் - கண்ணில்
பெய்கின்ற கருணை பெருவெள்ளத் தாலே
உய்கின்ற மனமும் தேறும்.

தன்னைப்போல் சுற்றமும் தரணியில் வாழ
எண்ணங்கள் பலவும் கொண்டான் - சின்ன
சினமுமே இல்லாது சிரித்த முகத்தாமரையில்
இனிதாக வாழ்ந்தான் என்றும்.

வான்முட்டப் புகழ்பெற்று வாழ்வினிலே இங்கு
தான்பெற்ற இன்பத்தில் ஆழ்ந்தான் - தன்
உதிரத்தில் உறுபத்து பிள்ளைகளும்
மதிகெட் டழுகின்றார் மனம்.

பெற்றெடுத்த புதல்வர்கள் பேரர்கள் யாவருடன்
சுற்றமும் சூழ்ந்து கலங்கியது - கொற்றவன்
அழைப்பினை ஏற்று அவர்பாதம் காண
விழைந்திட்டார் கதிராம போடி.

குலம்காத்த குணக்குன்றாய் குறைவற்ற அன்புமொழி
விலகாத பாசமழை ஈந்தார் - நிலம்மீது
அன்புச் சுரங்கமாய் ஆனஎம் தந்தைக்கு
என்றென்றும் அஞ்சலிகள் ஆயிரம்.

கொக்கட்டிச் சோலை தான்தோன்றி ஈச்சரம்
எக்காலும் சிந்தை கொண்ட ஈசன் - சாக்காலம்
வந்தாலும் சிவமுதலைச் சிந்தித்துச் செயலாற்றி
பந்தமுற்றான் பாடையில் படுத்து.

திருத்தாந்தா மலைவாழும் முருகனடி மேலெழவே
விருப்பானார் கதிராமர் என்தந்தை - அருப்பெனவே
அவனடியில் பலகாலம் அருந்தொண் டாற்றியபின்
அவனடியைச் சேர்ந்தார் அப்பா.

ஊர்பெருக தேசத்து வயலெல்லாம் பொன்கொழிக்க
பேரானார் வட்டைக்கு விதானை - சீராளன்
நல்லம்மா என்னம்மா நலம்காத்த பேராளன்
எல்லாமே ஆனாரோ இறை.

**திரு.திருமதி. கணபதிப்பிள்ளை - கிருபேஸ்வரி**
**குடும்பத்தினர்**
**அரசடித்தீவு.**

---

## வைகுந்தா நீ அறிவாயா

காணக் கிடைக்காத
கற்பூரப் பெட்டகமே!
கந்தையாய் ஆனோமே
கண்களே குளமய்யா.

தெய்வப் பிறவியே நீ
துயர்தீர்த்த வள்ளலும் நீ
தெய்வம் அழைத்தவுடன்
தெய்வமாய்ப் போனாயோ?

உற்றார் உறவினரும்
உன்னூரைச் சேர்ந்தவரும்
விம்மி அழுகின்றார்
வேதனையோ பெரிதய்யா!

செல்வங்கள் உன்னோடு
சேர்ந்து வாழ்கையிலே
சொல்லால் அணைத்தனையே
செல்வமே எங்குசென்றாய்?

சிவனெறிச் செம்மலென
செய்தபல சேவைகளும்
சொல்லி அழுதய்யா
சுந்தரனைக் காணாது

சீரும் சிறப்புமெலாம்
சேர்ந்து வருகையிலே
சொல்லாமல் சென்றாயே
சிவபதியை அடைந்தாயே.

ஊரும் உறவுமுனை
உயர்த்தும் காலமொன்றை
உணராமல் கொள்ளாமல்
ஒதுங்கியே போனாயே

பாழும் உலகினிலே
போலி மனிதருடன்
சோலி எதற்குஎனச்
சுதந்திரம் பெற்றாயோ?

வாழும் வாழ்வு வெறும்
மாயையென உணர்ந்து
சூளும் தளை நீக்கி
சொர்க்கம் புகுந்தாயோ?

மோனத் தவம் புரியும்
ஞானச் செழுஞ்சுடரே
காணத் தவம்கிடைத்தோம்
கண்டதோ சோகமய்யா

எங்கள் குலமுதல்வா
எங்கும் உறைந்தவனே
உந்தன் இது பயணம்
சொந்தன் இறைவனுக்கோ?

வேரும் அழுகிறது
விழுதும் அழுகிறது
விருட்சமே விழுகிறதே
வைகுந்தா நீ அறிவாயா?

**திரு.திருமதி. சிறிதரன் - ஜெயந்தி**
**வன்னியார் வீதி, களுதாவளை.**

# செழுங்குயிலே! கதிராமப்போடி தேவே!

செஞ்சுடரை மேகங்கள் சிறிதே சூழும்
சீர்பூத்த ஒளிவானும் இருண்டு காணும்
அஞ்சாதே நெஞ்சுரத்தை தாங்கு சற்றே
ஆங்கேபார் மீண்டும் ஒளி, வெற்றி காணே!
கொஞ்சுமொழி வெண்ணிலவைக் கறுத்த பாம்பு
கொண்டபிடி விண்டதுபார், வானக் காட்டில்
அஞ்சுநிலை கொண்டாய் இல்லை, தூய
ஆன்மாவே கதிராமப் போடி தேவே!

நெருப்பெரியும் கடுங்கோடை பின்னே தோன்றும்
நீர்பொழியும் கார்காலம் வரவு கூறும்
உருப்பெரிய கடற்பரப்பில் நீரின் வீழ்ச்சி
ஒவ்வொன்றும் அலையெழுச்சி முடியே சூடும்
விருப்பவிழ அங்கவைதாம் தழுவித் துள்ளும்
விளையாட்டில் சாயைஒளித் தொடர்ச்சி கண்டாய்,
திரைப்புறத்தே அலையாட்டில் அலைதல் ஓய்ந்த
சிந்தனையில் நெஞ்சுரத்தை தாங்கு தேவே!

உழைப்பெல்லாம் புண்ணாகி முடிய ஆங்கே
ஊக்கமெல்லாம் இன்பமெல்லாம் கனவாய்ப் போக
இழைத்தெழுந்த வாழ்க்கையெனும் பயணந் தன்னில்
எதிர்நோக்கி முடிந்தவிடம் தெழியாப் பாழாய்
களைத்தோடி உறங்குகையில் கவலை வேண்டா
வீரமெலாம் வலிமையெலாம் தணலாய் மூட்டி
அழைக்கின்ற இருட்டையெலாம் அழிக்கும் ஞான
அம்புயர்த்து! ஐயாவே! அமைதி கொள்ளே!

மெய்வருந்தக் கூலிதரும், விதைத்த தெல்லாம்
விளையாமற் போகாதே, ஆற்றல் குன்ற
மையிருட்டில் நம்பிக்கை மழுங்கும் நின்றன்
மனக்கருவில் வாழையடி வாழைக் கன்றாய்
மெய்வளர்க்கும் திருப்புதல்வர் தோன்ற வேண்டும்

வீரமனத் தவக்கனலை விளங்க மூட்டிக்
கைவிளக்கைச் சுடர்தூண்டி நடக்க வைத்த
கதிராமப் போடிஐயா கோவே வாழி!

அறிந்தோரும் நல்லவரும் அத்திப் பூவே
ஆனாலும் ஒளிகாட்டும் மூலம் ஆவார்
மறிந்தோடு பிறரெல்லாம் அறியா மக்கள்
மதியுணர்ந்து பின்னொருகால் தகுதி காண்பார்
செறிந்தோடு நின்மனத்துள் மக்கள் எல்லாம்
சிதறாது வாழ்கின்றார் சிறப்புப் பெற்று
நறுந்தாது பரப்புமொரு உன் நினைவில்
நீடூழி வாழ்வாரே நிமலன் நீயே!

காலத்தைக் கடந்துணரும் சித்தர் கூட்டம்
கருத்தறிந்து நின்னுள்ளே கலந்து நின்றார்
மூலத்து முழுச்சுடராய் எல்லாம் வல்ல
மெய்யன்புடைய பெருங்கடவுள் நின்னுள் நின்றார்
ஆலத்தை அமுதாக்கும் ஆதி சக்தி
அமுதூட்டி மென்சிறகில் ஆற்றல் தந்தாள்
சீலத்து வான்பரப்பில் மிதக்கும் செம்மல்
செழுங்குயிலே கதிராமப் போடி தேவே!

- கலாபூஷணம் தேனூரான் -

# 31ம் நாள் நினைவு மலர் சமர்ப்பணத்திற்காய்

மானிட வாழ்க்கை தனில்
நல்ல மாண்புடைய உத்தமனாய் – நீ
ஆண்டவனை அடிபணிந்து
கடவுள் வணக்கமதை கைவிடாமல்
எந்நாளும் திடமாக நின்ற உனை
காலனவன் அழைக்க கலங்காது
மண்ணுலகை விட்டு – அப்பா
நீ விண்ணுலகம் சென்றாயோ

மரணத்தை வென்றவர்கள்
மானிலத்தில் யாரும் இல்லை ஐயா
சாதனையாய் நீண்ட காலம்
வாழ்ந்து விட்டு சரிந்து விட்டாயோ

நானிலத்தோர் மனங்களில்
நல்ல மாண்பு கொண்ட தலைவனாய்
உத்தமனாய் இருந்து உறவுகளை
விட்டு பிரிந்து
அத்தன் அவனடி சேர்ந்து விட்டாயோ – அப்பா

மண்ணுலகை விட்டு நீ
மறைந்து போய் விட்டாலும்
எங்கள் நினைவை விட்டு – நீ
நீங்கவே முடியாதையா

குலத்தின் ஒளி விளக்காய் மலர்ந்து
உள்ளத்தால் உயர்ந்தோராய்
பள்ளம் மேடு தாண்டி – பல
தொல்லைகள் கடந்து
நல்லறமே சுவைத்து நின்ற
நாயகனே நீ

சமூகத்தால் உயர்ந்தோனாய்
சந்ததியால் பெரியோனாய்

ஊருக்கே உகந்தோனாய்
நிலமகளை நேசிப்போன் நீயையா

காலனவன் அழைக்க
கடவுள் பாதம் சென்றாயோ!
கலங்குகின்றோம்
நித்தமாய் நீ இளைப்பாறிய
நாளது மாறுமோ – (ஐயா) அப்பா

ஆவியடங்கினாலும் அடங்கவில்லை
உன் நாமம்
அன்பும் ஒளியவில்லையையா
பண்பும் மறையவில்லை
எத்தனை எத்தனை நாள் சென்றாலும்
உன் நினைவு ஓயாதையா
அத்தனைக்கும் அவனைத் துதிக்கின்றோம் – அப்பா

உந்தன் நினைவு எங்களை விட்டகலாது
உங்கள் ஆத்மா சாந்தி பெற்றிடவே
தான்தோன்றி அப்பரை
தாம் வேண்டி நிற்கின்றோம்
உன் ஆவி சாந்தி பெறும்
சிவலோகம் தனிலே

ஈசனடி போற்றி
எந்தையடி போற்றி
தேசனடி போற்றி
சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
செல்வச் சிவ புரத்தின் உள்ளார்
சிவனடிக்கு பல்லோரும் ஏற்றப்பணிந்து.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**மகன்**
**திரு.திருமதி. அருள்நாயகம்** குடும்பத்தினர்
கொத்தியாபுலை.

# தந்தையின் பிரிவால் தனயனும் அவர் குடும்பத்தினரும் தாங்கொண்ணாத் துயருறுதல்

## தனயன் புலம்புதல்

தந்தையரே எந்தன் தயவுடைய பிதாவே.......
கந்தை கசக்கியுடுத்து காலமெல்லாம் காத்தீரே...
சிந்தை கலங்கியே யானும் செயலிழந்து வாடுகின்றேன்
தந்தையரே என்னையந்திபகலாய் தவிக்கவிட்டு ஆழ்துயில் கொண்டீரோ?

## மருமகள் புலம்புதல்

மாமாவே எந்தன் மாதாவின் மூத்த உடன்பிறப்பே.....
கோமானே எங்கள் குலத்தின் சுடர்விளக்கே.....
மண்ணுலகை விட்டு மாமாவின் ஆன்மா பிரிந்த செய்தி கேட்டு....
விண்ணுலகை அவர் ஆன்மா சென்றடைய சதா இறைவனை வேண்டுகின்றேன்.

## பேரப்பிள்ளைகள் புலம்புதல்

அப்பப்பா, அம்மப்பா எங்களுக்கு அன்பு வார்த்தைகள் கூறும் ஆசானே
எப்பப்பா நாங்கள் இனி உங்கள் இனியவார்த்தைகள் கேட்பதெப்போ?
அப்பப்பா, அப்பம்மையை இளந்து ஆண்டொன்று செல்கையிலே
அப்பாவே எங்களை நீங்கள் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டீரே.

## ஒருமித்தலறுதல்

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ மானிலத்தில்
பல்லாண்டு பதறித்தவிப்பதால் லென்னபயன்
சில்லாண்டு கழித்து சிதையும் இவ்வுடம்பை
பல்லாண்டு நிலைக்கு மென்று நினைப்பவர் நெறி கெட்டமூடரே।

**அன்னாரின் ஆன்மா ஆறுதல் அடைய இறைவனை பிரார்த்திப்போமாக...**

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**இவ்வண்ணம்**
**க. ஞானசேகரம்** (மகன்)
குடும்பத்தினர்.

உ

# கண்ணீர் காணிக்கை

சீர்பூத்த செல்வச் செழும்பதியாம்
செந்நெல் விளை சிறப்பூராம்
பார்போற்றும் பண்பாளர் வாழ்
பண்டைத் தமிழர் தம் தாயூராம்
அம்பிளாந்துறையதனில்

பேர்பூத்த தன்மப்போடி குஞ்சினாச்சிப்
பிள்ளை தம்பதியர்கட்கு பெருமைபெறு
மூத்தமகனாய் மடி தவழ்ந்தகாலை
ஊர்போற்ற உற்றார் மனமகிழ
கதிராமப்போடியென நாமம்சூட்டி

பள்ளிப் பருவம் வந்தெய்த நின்னை
கல்விச் சாலைக்கேகவைத்துத்
துள்ளித்திரிந்த நின் துடுக்கடக்கி
தலைமகனாய் தரணிக்கு ஆளாக்கினரே

வாலிபத்தை நின்வயது வந்தெய்த
வரம் கேட்ட மாமன் மகளாம்
கோல எழில் மிக்க கோதையாம் – அரசையூர்
நல்லம்மாவைக் கரம் பிடித்தாய்

இல்லறத்தின் நாயகியாள் தன்னோடும்
இணைபிரியாது இன்பமுடன் நீ வாழ்ந்து
நல்லறத்தின் நற்பயனாய் ஆண்மாக்கள்
ஆறும் பெண்மகவு நான்குமெனப் பெற்றெடுத்தாய்

இன்னமுதளித்து இனிய மொழிதான் பேசி
எளிமையுடன் என்றுமே தான் வாழ்ந்து
வள்ளுவன் குறள்வழி நன்மக்கள் தாம்
என்றியம்ப வழியமைத்துக் கொடுத்தாயே

நெடுநாள் இந்நிலவுலகில் நீவாழ்ந்து
நேரிய பணிகள் பல ஆற்றியிருந்தாய்
அதனால் புகழ் மாலைகள் பட்டங்கள் என
என்றும் உனக்குச் சமர்ப்பணம்

வண்ணக்கர் என்பதிலும் பார்க்க என்றும்
கொழும்பார் என்றுதானே பொதுமக்கள்
வண்ணமுற வாயார அழைப்பார்கள்
வள்ளலே எங்கள் வாழ்வின் தீபமே

தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில்
தலைமை வண்ணக்கர் பதவியேற்று
நீண்டநாள் திருப்பணிதான் செய்து
நின் புகழை ஈட்டிக் கொண்டாய்

ஆடித்திங்கள் முப்பதாம் நாளதனில்
ஆவிதுறந்தார் நின்மனையாள்
கூடிவாழ்ந்த மனையாளை எண்ணி நிதம்
குற்றுயிராச்சு நின்னுடலும்

நாடித்துடிப்பு நான்கு மாதங்களில்
நின்று போய்விடும் என்றெவரும்
நாடிவந்தெமக்கு உரைத்தாரில்லை
நாமும் நொந்து அழுகின்றோம் நின் ஆவிபோனபின்பு

தொண்ணூற்றாறாம் வயததனில்
தொலைந்து போச்சு நின்னுயிரும்
கண்ணுற்றுக் கதறியழும் நின்புதல்வர்கள் எமக்கு
கனிவான வார்த்தை ஏதும் சொல்லாயோ – அப்பா

எண்ணற்ற அறிவுரைகள் எமக்கு நிதம்கூறி
என்றுமே எமைக் காத்த மாமாவே
கண்திறந்து பேசாயோ கவலைகளைத் தீராயோ
காலனவன் நின்னுயிரைக் கவர்ந்த மாயமென்ன கூறாயோ மாமாவே

தூரதேசம் சென்றாலும் நாங்கள்
தொலைபேசியில் நிதம் உரையாடி

நாரும் பூவும் இணைந்த மாலையென
நம்முறவை வளர்த்தோமே தெய்வமே
வீழ்ந்த உடல் மீண்டும் எழுந்திடாதோ
வேதனைகள் எம்மைவிட்டோடிடாதோ
ஆழ்ந்து துயில் கொள்கிறாயோ அண்ணா
அன்பு மொழி பேச எழுந்திடுவாய் அண்ணாவே

பிஞ்சுமனங்களில் என்றும் நிறைந்த எம்
பிரியமுள்ள தாத்தாவே நிதம்
பஞ்சதந்திரக் கதைகள் பல இனியாரிடந்தான்
பகரச் சொல்லி அடம்பிடிப்போம் தாத்தாவே

கார்த்திகைத் திங்கள் 29ஆம் நாளதனில்
காலன் நின்னுயிரைக் கவர்ந்ததேனோ
பார்த்திருந்தோர் இங்கே புரண்டழுவதை
பாசமுடன் கண்திறந்து பார்க்காயோ

மார்கழித் திங்கள் 29ம் ஆம் நாளதனில்
மாலைகள் பல கோர்த்து மனதார சூட்டி – நின்
முப்பத்தோராம் நினைவு நாளதனில்
முத்திபெற இறைஞ்சுகின்றோம்
ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் அருள்வேண்டி

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**ஆக்கம் :**
**மாவூரான் ரவி**
**த. ரவிராஜா (அதிபர்)**
மட்/கடுக்காமுனை வாணி வித்தியாலயம்
**கொக்கட்டிச்சோலை.**

# ஒப்பில்லா தலைவா நீ என்றும் எம்மோடு வாழ்வாய்

செந்தமிழால் குயில்பாடும் செந்நெல், பால், தேன் விளைமருத நிலமாம் பழம்பெரும் சிறப்பு மிகு அம்பிளாந்துறையில் பேரும் புகழுமாகத் திகழ்ந்த திரு.திருமதி.தன்மப்போடி தம்பதியரின் முதல் மகனாகப் பிறந்து, மண்ணில் உருண்டு, பிரண்டு, திரண்ட தோளோடு வளர்ந்துபிரகாசித்தார்.

இந்நாளில் வந்தாரை வாழவைக்கும் நல் வல்லோர் வாழ்பதியாம் அரசையூரில் சிறந்து விளங்கிய உயர் குடும்பப் பெண்ணான நல்லம்மாவைக் கரம்பிடித்து ஆணும் பெண்ணும் என முறையே ஆறும் நாலுமாக மண்ணில் நிலைத்தூண்களாக உருவாக்கி விட்டார்.

மும்மொழித் தேர்ச்சி காண்போர் வியக்கும் தோற்றம், ஆளும் வளர வளர ஆளுமையும் சேர்ந்தே வளர்ந்து உளர், பிரதேசம், மாவட்டம், தேசியம் எனப் பிரகாசித்தார். தாந்தா தான்தோன்றீஸ்வரர் என்று பல திசையும் தடம்பதித்தார். குழந்தைகள் முதல் சான்றோர் வரை கொழும்பாருடன் அல்லது வண்ணக்கருடன் கதைக்க ஆசை கொண்ட உன்னதம் வேறு யாருக்கு இருக்கும், சொல், தெளிவு, கருத்து ஒழுங்கு, மற்றோர் கருத்தை உன்னிப்பாகக் கவனிக்கும் பொறுமை, விமர்சனங்களைக் கண்டு அஞ்சாது, சாட்டுச் சொல்லாது, விலகிவிடாது தூசிபோல் தட்டிவிட்ட தன்னிகரில்லாத் தலைவன் அவராவார். சிலுசிலுப்புக்கெல்லாம் சோர்ந்துவிடும் மனிதர்களுள் உடல், உளத்தாக்கம் எதனையும் காட்டாது, சிவபூசையும், ஜீவ சேவையும் என இறுதிவரை நின்ற பெருமையில் அவர் முதலிடம்.

ஒருமுறை இந்தப் பெருமைக்குரிய சிவநெறிச் செம்மலை அம்பிளாந்துறை மக்கள் கழகம் அழைத்து பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது. அப்போது பேசிய அவர் என்னை யாரும் முதியவர் என எண்ணாதீர்கள் எனக்கு வயது 28, நான் இப்போது முழு இளைஞன் என்றார். அப்போ அப்பெருமானின் வயது 82 இதனை மாற்றிச் சொன்னதோடு, அப்படிப்பட்ட உணர்வோடு வாழ்ந்து காட்டிய வினோதமான, விசித்திரமான பெருமைக்குரியவர்.

எத்திறத்தாருள்ளும், மேலோங்கி நிற்கும் ஆளுமை மூன்று நான்கு சந்ததி கடந்தும் அத்தனையோடும் இயைந்து போகும் உன்னதம். இப்படிப் பார்த்தால் நவீன அறிவியலின் தலைமைத்துவ நுட்பங்கள் ஒருங்கே பொருந்திய ஒரு பாடப்புத்தகம் ஓர் அகராதி. அவருக்கு நிகர் அவரேதான்.

திரு. மா. ஜீவரெத்தினம் ஆசிரியர்
மட்/அரசடித்தீவு வி.ம.

---

**தான்தோன்றீஸ்வரனே கதியென**
**அன்புற்ற அறநெறியில் சைவத் தொண்டு பலபுரிந்து**
**என்றும் எல்லோரிடமும் இன்முகத்துடன்**
**அன்பாய் பழகி**
**மாநிலம் புகழ வாழ்ந்தீர்**
**பிறப்பவர் இறப்பது தான் நியதி என்று**
**மனதைத் தேற்றி**
**மங்களமாய் மோட்சம் சேர**
**வணங்குகிறோம் இறைவன் பாதம்.**

**திரு.திருமதி. கணபதிப்பிள்ளை**
குடும்பம்
மட்டக்களப்பு.

# ஆலமரமாய் விரிந்தது அன்புச் சோலை!....

சங்கத் தமிழ் தவழ்ந்து வரும்
உன் பெயர் சொல்ல
ஏங்கித் தவிக்கிறது எங்கள் உயிர்
தாங்கித் தாலாட்டுது அப்பப்பா உன் உயிர்.

கண்ணீர்த் துளிகள் கடலாய் பெருகி
கவிதை வரிகள் காற்றில் ஏறின
மூச்சாய் முளங்கின விண்ணில் இருந்து
பேச்சாய் விளங்கும் மண்ணில் என்றும்!

ஏட்டில் எழுதுகிறோம் உன் பெயரை
நாட்டில் வலம் வர அல்ல
எத்தனை தசாப்தமானாலும்
எங்களின் ''நெஞ் சிலையில்''
அளிந்து போகாது உந்தன் அன்பலை!

மங்காது நீ வளர்த்த அறம்
மாண்டு போகாது உன் பெயர்ச்சிலம்
சிவநெறிச் செம்மல் நீ
சிவபத்தி ஓமங்கள் புத்திரனுக்காய் எரிகிறது!

சிறு மழலைகள் ஏம்பியதில் இருந்து
சித்தம் ஓதும் சீடர்கள் வரை
முற்றம் முற்றமாய் உன்பெயர் உரைத்தது ஏனோ
ஆலமரமாய் அகலவிரிந்து
பால்வளியும் விழுது நிமிர்ந்து
அன்பு விதை விதைத்துப் போனதாலோ
உங்களின் ஆத்மா சாந்திக்காய்
தலைவணங்கி பிரார்த்திக்கின்றோம்.

கந்தப்போடி - சுதாநிதி
அரசடித்தீவு.

# திருவெம்பாவை

– திருச்சிற்றம்பலம் –

தொல்லையிரும் பிறவி சூழும்தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தமாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசக மென்னும் தேன்.

01. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து
போதார் அமளியின் மேல் நின்றும் புரண்(டு) இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்!

02. பாசம் பரஞ்சோதிக்(கு) என்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ(து) எப்போ(து) இப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடம் ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்(கு) அன்(பு) ஆர்யாம் ஆர்ஏலோர் எம்பாவாய்!

03. முத்தன்ன வெண்ணகையாய்! முன்வந்து எதிரெழுந்(து) என்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்(று) அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்(து) உன் கடை திறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர்! பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்(து) ஆட்கொண்டால் பொல்லாதோ
எத்தோ நின் அன்புடமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்!

04. ஒள்நித் திலநகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ

எண்ணிக்கொ(டு) உள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத்துயின்(று) அவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்(கு) ஒருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக்(கு) இனியானைப் பாடிக் கசிந்(து) உள்ளம்
உள்நெக்கு நின்(று) உருக யாம்மாட்டோம்
நீயே வந்(து) எண்ணிக் குறையில் துயில ஏலோர் எம்பாவாய்!


05. மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ! கடைதிறவாய்,
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மை ஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனே என்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய் காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்!

06. மானே! நீ நென்னலை நாளைவந்(து) உங்களை
நானே எழுப்புவன் எனறலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்கு உன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கு
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்!

07. அன்னே! இவையும் சிலவோ பல அமரர்
உன்னற்(கு) அரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன் என்றே வாய்திறப்பாய்
தென்னா என்னா முன்னந் தீசேர் மெழு(கு) ஒப்பாய்
என்ஆனை என் அரையன் இன்னமு(து) என்(று) எல்லேமுஞ்
சொன்னோம் கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர் போல் வாளா கிடத்தியாய்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்!

08. கோழி சிலம்பச் சிலம்பும் குரு(கு) எங்கும்
எழில் இயம்ப இயம்பும் வெண் சங்(கு) எங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப் பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ(து) என்ன உறக்கமோ வாய்திறவாய்

1994ம் ஆண்டு இந்து கலாச்சார அமைச்சினால் ஆலய ஆத்மீக சேவைக்கு "சிவநெறிச்செம்மல்" எனும் பட்டம் வழங்கி கௌரவித்தபோது எடுத்த காட்சி



ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறே
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்!

09. முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்
உன்னடியார் தாழ்பணிவோம் ஆங்(கு) அவர்க்கேபாங் காவோம்
அன்னவரே எங்கணவர் ஆவார் அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல் குதியேல்
என்ன குறையும் இலோம் ஏலோர் எம்பாவாய்!

10. பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒரு தோழன் தொண்டருளன்
கோதில் குலத்தான்றன் கோயிற் பிணாப் பிள்ளைகாள்
ஏதவன் ஊர் ஏதவன்பேர் ஆர் உற்றார் ஆர் அயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்!

11. மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேர் என்னக்
கையால் குடைந்(து) குடைந்(து) உன் கழல்பாடி
ஐயோ வழியடியோம் வாழ்ந்தோம் காண் ஆரழல்போல்
செய்யா! வெண்ணீறாடி! செல்வா! சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா!
ஐயா! நீ ஆட்கொண்(டு) அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்(து) ஒழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்

12. ஆர்த்த பிறவித்துயர் கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன் நன்றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன் இவ்வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழலமேல் வண்டார்ப்பப்
பூத்திகளும் பொய்கை குடைந்(து) உடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனை நீர் ஆடேலோர் எம்பாவாய்!

13. பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்(து) ஆர்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்(து) ஆடேலோர் எம்பாவாய்!

14. காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள் பாடி அப்பொருள் ஆ மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம் ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்!

15. ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீர்ஒருகால் வாய்ஓவான் சித்தம் களிகூர
நீர்ஒருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பார் ஒருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேர்அரையற்(கு) இங்ஙனே பித்(து) ஒருவர் ஆமாறும்
ஆர் ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வார் உருவப் பூண் முலையீர் வாயார நாம்பாடி
ஏர் உருவப் பூம்புனல்பாய்ந்(து) ஆடேலோர் எம்பாவாய்!

16. முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்(து) உடையாள்
என்னத் திகழ்ந்(து) எம்மை ஆளுடையாள் இட்டிடையீர்
மின்னிப் பொலிந்(து) எம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிறவிலா எங்கோமா என் அன்பர்க்கு
முன்னி யவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்!

17. செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம் நம் பாலதாக்

கொங்குண் கருங்குழலி! நந்தம்மைக் கோதாட்டி
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்(து) ஆடேலோர் எம்பாவாய்!

18. அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீறற்றாற்போல்
கண்ணோர் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல்பாய்ந்(து) ஆடேலோர் எம்பாவாய்!

19. உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்(று)
அங்கப் பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகல் எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன்! நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி(று) எமக்கேலோர் எம்பாவாய்!

20. போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீராடேலோர் எம்பாவாய்!

~ திருச்சிற்றம்பலம் ~

**தொகுப்பு :**

**முரளிதரன் - ஜெகதீஸ்வரி**

**அபிநயா** (சுவீஸ்)

# பொது அறிவு

01. இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர்?
ஆனந்த சமரக்கோன்

02. தேசிய கீதத்தை தமிழில் மொழி பெயர்த்தவர்?
புலவர் மு.நல்லதம்பி

03. இலங்கையின் முதலாவது பிரதமர்?
கௌரவ டி.எஸ்.சேனநாயக்க

04. உலகின் முதலாவது பெண் பிரதமர்?
திருமதி.ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க

05. இலங்கை பணத்தில் (தாள்காசு) ஒப்பமிடும் அதிகாரம் யார் யாருக்கு உண்டு?
நிதி அமைச்சர், மத்திய வங்கி முகாமையாளர்

06. இலங்கை நாணயங்களை வெளியிடும் வங்கி?
இலங்கை மத்திய வங்கி

07. இலங்கைக்கு புத்த மதத்தை கொண்டு வந்தவர்?
மகிந்த தேரரும் அவரது சகாக்களும்.

08. இலங்கையின் அழகிய நீர்வீழ்ச்சி என அழைக்கப்படுவது?
துன்கிந்த நீர்வீழ்ச்சி

09. இலங்கையின் உயரமான நீர்வீழ்ச்சி என அழைக்கப்படுவது?
பம்பரகந்த நீர்வீழ்ச்சி (240m)

10. சிகிரியா ஓவியத்தைப் போன்று வேறு எங்கு உள்ளது?
இந்தியாவில் உள்ள அஜந்தா ஓவியம்

11. சிகிரியாவில் உள்ள விசேட அம்சங்கள்?
i) அழகிய பெண் ஓவியங்கள்

ii) சிங்கத்தின் வாய்போன்று அமைந்துள்ள நுளைவாய்
iii) பாரிய அகளிகள்

12. இலங்கை குடியரசு ஆனது எப்போது
22-05-1972

13. இலங்கையில் ஆட்சி செய்த கடைசி மன்னன்
ஸ்ரீ விக்ரம இராஜசிங்க

14. இலங்கையின் இலவச கல்வியை அறிமுகம் செய்தவர்
C.W.W.கன்னங்கரா

15. இலங்கையின் முதலாவது ஜனாதிபதி
சேர் பில்லியம் கோபல்லாவ (1972)

16. இலவச பாடநூல் விநியோகத்தை அறிமுகப்படுத்தியவர்
J.R. ஜெயவர்த்தனா

17. இலங்கையின் செயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம்
கொழும்பு

18. இலங்கையில் முதல் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி
J.R.ஜெயவர்த்தனா

19. இலங்கையின் உ்யரமான அணைக்கட்டு
விக்டோரியா

20. பம்பர கந்த அமைந்துள்ள நதி
வளவைகங்கை

தொகுப்பு :
இரா. பிரஷோபன்
ஆண்டு - 4
புனித மிக்கேல் கல்லூரி
மட்டக்களப்பு.

# உங்கள் பிறந்த எண் - விதி எண்ணுக்கு அமைய அதிர்ஷ்டகரமான பெயர் எண் அட்டவணை

**எண் - 1**

| ஜெனன எண் | விதி எண் | பெயர் எண் |
|---|---|---|
| 1- | 1- | 1 |
| 1- | 2- | 1 |
| 1- | 3- | 1 |
| 1- | 4- | 1 |
| 1- | 5- | 1,5 |
| 1- | 6- | 1,6 |
| 1- | 7- | 1 |
| 1- | 8- | 5 |
| 1- | 9- | 1,9 |

**எண் - 2**

| ஜெனன எண் | விதி எண் | பெயர் எண் |
|---|---|---|
| 2- | 1- | 1 |
| 2- | 2- | 1 |
| 2- | 3- | 9 |
| 2- | 4- | 1 |
| 2- | 5- | 5 |
| 2- | 6- | 6 |
| 2- | 7- | 1 |
| 2- | 8- | 5 |
| 2- | 9- | 9 |

**எண் - 3**

| ஜெனன எண் | விதி எண் | பெயர் எண் |
|---|---|---|
| 3- | 1- | 1 |
| 3- | 2- | 1,9 |
| 3- | 3- | 9 |
| 3- | 4- | 1,9 |
| 3- | 5- | 5 |
| 3- | 6- | 6 |
| 3- | 7- | 1,9 |
| 3- | 8- | 5 |
| 3- | 9- | 9 |

**எண் - 4**

| ஜெனன எண் | விதி எண் | பெயர் எண் |
|---|---|---|
| 4- | 1- | 1 |
| 4- | 2- | 1 |
| 4- | 3- | 1,9 |
| 4- | 4- | 1 |
| 4- | 5- | 5 |
| 4- | 6- | 6 |
| 4- | 7- | 1 |
| 4- | 8- | 5 |
| 4- | 9- | 9 |

| எண் - 5 | | | எண் - 6 | | |
|---|---|---|---|---|---|
| ஜெனன எண் | விதி எண் | பெயர் எண் | ஜெனன எண் | விதி எண் | பெயர் எண் |
| 5- | 1- | 1,5 | 6- | 1- | 1,6 |
| 5- | 2- | 5 | 6- | 2- | 6 |
| 5- | 3- | 5 | 6- | 3- | 6 |
| 5- | 4- | 5 | 6- | 4- | 6 |
| 5- | 5- | 5 | 6- | 5- | 5,6 |
| 5- | 6- | 5,6 | 6- | 6- | 6 |
| 5- | 7- | 5 | 6- | 7- | 6 |
| 5- | 8- | 5 | 6- | 8- | 5 |
| 5- | 9- | 5,9 | 6- | 9- | 6,9 |

| எண் - 7 | | | எண் - 8 | | |
|---|---|---|---|---|---|
| ஜெனன எண் | விதி எண் | பெயர் எண் | ஜெனன எண் | விதி எண் | பெயர் எண் |
| 7- | 1- | 1 | 8- | 1- | 5 |
| 7- | 2- | 1 | 8- | 2- | 5 |
| 7- | 3- | 1,9 | 8- | 3- | 5 |
| 7- | 4- | 1 | 8- | 4- | 5 |
| 7- | 5- | 5 | 8- | 5- | 5 |
| 7- | 6- | 6 | 8- | 6- | 5 |
| 7- | 7- | 1 | 8- | 7- | 5 |
| 7- | 8- | 5 | 8- | 8- | 5 |
| 7- | 9- | 9 | 8- | 9- | 5 |

## எண் - 9

| ஜெனன எண் | விதி எண் | பெயர் எண் |
|---|---|---|
| 9- | 1- | 1,9 |
| 9- | 2- | 9 |
| 9- | 3- | 9 |
| 9- | 4- | 9 |
| 9- | 5- | 5,9 |
| 9- | 6- | 6,9 |
| 9- | 7- | 9 |
| 9- | 8- | 5 |
| 9- | 9- | 9 |

## எண் சோதிடம்

| | |
|---|---|
| AIJQY | - 1 |
| BKR | - 2 |
| CGLS | - 3 |
| DMT | - 4 |
| EHNX | - 5 |
| UVW | - 6 |
| OZ | - 7 |
| FP | - 8 |

தொகுப்பு :
தரணிதரன் - பகீரதி
சுவிஸ்



இந்துசமய, கலாசார அலுவல்கள்
இராஜாங்க அமைச்சு

# பக்திப் பெருவிழா - 1994

1994 ஆனி மாதம் 11ம் திகதி சனிக்கிழமை
கொழும்பில் நடைபெற்ற
பக்திப் பெருவிழாவில்
திரு. ந. கதிராமப்போடி வணிணக்கர்
அவர்களுக்கு
இந்து சமயத்தின் வளர்ச்சிக்கு
அவர் ஆற்றிய அரும்பணியைப் பாராட்டி
சிவநெறிச் செம்மல்
என்னும் பட்டம்
வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

பி.பி. தேவராஜ்
பி. பி. தேவராஜ்
இந்துசமய, கலாசார அலுவல்கள்
இராஜாங்க அமைச்சர்

# மரண அறிவித்தல்

மலர்வு 04 - 10 - 1911



உதிர்வு 29 - 11 - 2006

அமரர்

## தன்மப்போடி கதிராமப்போடி

அரசடித்தீவு

அரசடித்தீவை வசிப்பிடமாகக் கொண்டவரும் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலனசபை முன்னாள் செயலாளரும் வண்ணக்கருமாகிய சிவநெறிச் செம்மல் த.வ.வி கதிராமப்போடி (கொழும்பார்) அவர்கள் 29-11-2006ம் திகதி தனது 96 வது வயதில் சிவபதம் அடைந்தார்.

அன்னாரின் தகனக்கிரிகை அரசடித்தீவு பொது மயானத்தில் 30-11-2006 வியாழக்கிழமை பி.ப 4:00 மணிக்கு இடம் பெறும் இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

30.11.2006

தகவல்
குடும்பத்தினர்
0602651658

கொக்கட்டிச்சோலை Tel:065-2226110

# விழி நீர் அஞ்சலி!

மலர்வு 04 - 10 - 1911

உதிர்வு 29 - 11 - 2006



அமரர்

## தன்மப்போடி கதிராமப்போடி

### அரசடித்தீவு

அம்பிளாந்துறையூரில் அகம் மகிழ்ந்து அவதரித்து
அரசடித்தீவிலே அன்பு மனையாளைக் கரம் பிடித்து
ஆக்கம் கருதி ஆலயப் பணி பல செய்து
ஆண்டவன் அடியினுக்கே அனிச்சமாய் சென்றாயோ!

சிவநெறிச் செம்மலாய் சீராய் நடை நடந்தாய்
செப்புவாய் வார்த்தை தனை ஒப்பிய தன்மையுடன்
சொல்லாமல் செய்திடுவாய் துயர்துடைக்கும் உதவியை
சிணமகலும் அதைக் கண்டு சிறுமைநீக்கும் எமக்கல்லோ!

முப்பது வருடமாய் முழு மூச்சாய் சேவை செய்து
அப்பணியின் தலத்திலே அயராது பாடுபட்டு
வெட்கித் தலை சாயாமல் விதானமுடன் நடைபோட்டு
வட்டிதொட்டி எல்லாம் வகைதொகையின்றிச் செயற்பட்டாய்!

தாந்தாமலை ஆலயத்தில் தலைவராய் நீயிருந்து
தயாபரமாய் செயற்பட்டாய் தீயவற்றைத் துயர் துடைத்து
தான்தோன்றீஸ்வரர் ஆலய வண்ணக்கராய் செயலாற்றி
தானம் கொடுத்தாயே தயவின்றி சபையறிந்து!

ஓடிய தேர் இடைநடுவில் ஓடாமல் நின்று விட
எட்டுத் திக்கும் அதிர்ந்தது பிழையென்று அன்றல்லோ
வாடிய முகத்துடன் அப்பணியைத் தான் ஏற்று
குதுகலித்தாய் தேரோட தேசமும் போற்றியதே!

ஆவி அடங்கினாலும் அடங்கவில்லை அறப்பணி
அன்பும் ஒழியவில்லை பண்பும் மறையவில்லை
ஆன அடியார்க்கு அடிமையென வாழ்ந்து நீயும்
இறைவனிடத்தில் நித்திய முத்தராய் சென்றாயோ!
"வையகம் இருக்கு மட்டும் வாழும் உன்பணி"
ஓம் சாந்தி........... சாந்தி ........... சாந்தி........

ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்
கொக்கட்டிச்சோலை.

உன் பிரிவுத் துயரில்
ஆலய பரிபாலன சபை

கொக்கட்டிச்சோலை Tel:065-222610

# கண்ணீர் காணிக்கை

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 04 | | 29 |
| 10 | | 11 |
| 1911 | | 2006 |



அமரர்

## தன்மப்போடி கதிராமப்போடி (அரசடித்தீவு)

படையாட்சி குலமதனைப் பண்போடு வழிநடத்தி
திடமாக நிமிர்ந்து நின்று தேவைக்காய் சேவை செய்தாய்
வடமோட முயற்சி செய்து குடை போல பரந்து நின்று
விடைபெற்றுச் சென்றாயோ மடை திறந்த வெள்ளத்தில்!

குட்டக் கல் கட்டடம் குறிப்புணர்ந்து சொல்லுதப்பா
மட்டில்லா உன் பணியைத் தட்டித் தட்டிப் பார்க்குதப்பா
சொற்கரிய செயல்வீரா மற்றோரும் உனக்கப்பா
வெற்றிடமாய் உள்ளதப்பா விட்ட பணி இடத்தில்!

தன்னை மறந்து மண் பணிக்காய் மண்டியிட்டாய்
எள்ளுநறும் எண்ணெய்போல் எங்கும் பரவி நின்றாய்
கள்ளுண்ட வண்டுபோல் களிதரும் ஆனந்தமாய்
தாணரனாய் இருந்து இளைப்பின்றிச் சேவை செய்தாய்!

ஆலயப் பணிக்காய் ஆண்டவனை அடி பணிந்தாய்
அங்கமெல்லாம் நொந்து அறப்பணியைச் செய்து வந்தாய்
பங்கமில்லாப் பணியாவும் பயமின்றி நிறைவேற்றி
பங்கயமாய் மடிந்து நீயும் பாதாரவிந்தம் சென்றனையோ!

குலமுறை சொல்லிடுவாய் குலத்திற்காய் பணிசெய்வாய்
குற்றம் களைந்து கூற்றுவனை வென்றிடுவாய்
ஆவணத்தைப் பாதுகாத்து அயராது உழைத்திடுவாய்
அன்பின் வழிக்காய் அர்ப்பணிப்பாய் தேகமதை!

தோன்றின் புகழோடு தோன்றியே நீர் வாழ்ந்து
வென்றிட்டாய் உலகையே ஆலயப் பணியாலே
ஓ.... வென்று அழுகிறது தேசமெல்லாம் உனையெண்ணி
ஓங்கார யுகத்தினுள் ஒடுங்கினாயோ ஸ்ரீமானாய்!

ஓம் சாந்தி...... சாந்தி.......... சாந்தி......

ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம்
கொக்கட்டிச்சோலை.

உன் பிரிவால் துயருறும்
படையாட்சி குலமக்கள்

Tel:065-222600

# மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 04 | 29 |
| 10 | 11 |
| 1911 | 2006 |

அம்பிளாந்துறையை பிறப்பிடமாகவும் அரசடித்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய பரிபாலன சபை முன்னாள் செயலாளரும் சிவநெறிச் செம்மல் **த.வ.வி கதிராமப்போடி (வண்ணக்கர்)** அவர்கள் 2006.11.29ம் திகதி புதன்கிழமை சிவபதம் அடைந்தார். அன்னார் காலம்சென்ற நல்லம்மாவின் அன்புக்கணவரும் காலம் சென்றவர்களான தன்மப்போடி-குஞ்சிநாச்சிப்பிள்ளையின் மூத்த புதல்வரும்,

நேசம்மா, பாலாத்தை, நாகாத்தை (கனடா) நாகண்டாப்போடி, காலம் சென்றவர்களான வள்ளியம்மை, சின்னத்தங்கம், பாக்கியம், முத்திப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும்

காலம்சென்ற அருளானந்தம், கிருபேஸ்வரி, ஞானசேகரம் (பிரதேச சபை கொக்கட்டிச்சோலை) சிவஞானசெல்வம், கங்கேஸ்வரி (சுவிஸ்), அருள்நாயகம், சிவராசா, சிவபாலன் (இ.போ.ச.மட்.சாலை), தவமலர், சிவமலர், (ஆசிரியை ஒந்தாச்சிமடம். வி.வி) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

கருணையம்மா, கணபதிப்பிள்ளை (ஓ.கி.சே உத்தியோகஸ்தர்), நந்தினி (இந்தியா), பரமேஸ்வரி, சுந்தரலிங்கம் (முன்னாள் இ.போ.ச.மட்.சாலை, மட்.தாந்தாமலை குமார் பொன்னம்பல மண்டபஸ்தாபகர் சுவிஸ்), , இந்திராணி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர்) ராதாராணி, சாந்தினி, குருகுலசிங்கம் (புகையிரத நிலையம் மட்டு) லோகநாயகம் (ஆசிரியர் தேற்றாத்தீவு மகா வித்.) ஆகியோரின் அன்பு மாமனாரும்,

சிறிதரன் (ஆசிரியர் களுமுந்தன்வெளி அ.த.க.பாடசாலை) சிறிவாணி, சிறிவதனி, ஜோதீஸ்வரன் (சுவிஸ்), ஜெகதீஸ்வரி (சுவிஸ்), பகிரதி (சுவிஸ்), பிரபாகரன் (சுவிஸ்), குருசாமினி, குருசாளினி, குருசாந்தன், டிகோத்மன், கௌசலியா ஆகியோரின் அப்பப்பாவும்,

பவானி, பவானந்தன் (சவூதி), பகிரதன், தரணிதரன் (சுவிஸ்), தினேஸ்தரன் (லண்டன்), கார்த்திகா (இந்தியா), மஞ்சுளா, டிலாஞ்சனி, டிலோசனா, தினுஷா, கினோஜன், தவஜோதி, கிருஸ்ணகுமார், யதீஸ்வரன், தர்ஷிக்கா, சிவசங்கர், சிவரூபன், நிமாலினி, திசானி, விதுஷன் ஆகியோரின் அப்பப்பாவும்,

ஜீவரெத்தினம் (சவூதி), இராசதுரை (அம்பாள் அரிசி ஆலை தாளங்குடா), முரளிதரன் (சுவிஸ்), ஜெயந்தி (ஆசிரியை, வந்தாறுமூலை வி.வி) கீதா (சுவிஸ்) ஆகியோரின் பாட்டனாரும், அனோஜன், அனோஜித், யதுராஜ், பிரஷோபன், பிரஷோபிகா, அபிநயா (சுவிஸ்) ஆகியோரின் பூட்டனுமாவார்.

**அன்னாரின் பூதவுடல் 30.11.2006ந் திகதி பிற்பகல் 4:00 மணிக்கு அரசடித்தீவு பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

அரசடித்தீவு
30.11.2006

Tel:0602651658.

தகவல்
குடும்பத்தினர்

கொக்கட்டிச்சோலை Tel:065-22260

"உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

# கண்ணீர் அஞ்சலி!

மலர்வு
04
10
1911



உதிர்வு
29
11
2006

அமரர்

## த.வ.வி கதிராமப்போடி (வண்ணக்கர்)

**29.11.2006ம் திகதி புதன்கிழமைஇறைபதம் அடைந்த சிவநெறிச் செம்மலும் முன்னாள் விக்னேஸ்வரர் ஆலய செயலாளருமாகிய அமரர் த.வ.வி கதிராமப்போடி அவர்களுக்கு இவ் இரங்கற்பா சமர்ப்பணம்......**

தெய்வத்தின் திருவருளால் திருமகனே நீ பிறந்து
பெரியகல இப்புவியில் புகழுடனே வாழ்ந்து வந்தாய்
வீரம் விளைநிலத்தின் விறவெள்ளி நீயல்லோ
சீருடன் உன்பணியை செய்து வந்தாய் தெய்வத்திற்கு,

எங்களது கிராமத்திற்கு வந்து நீங்கள் செய்த பணி
எடுத்தியம்ப முடியாத எச்சங்களாய் நிற்கிறது
சொல்லிலே செல்வன் நீங்கள் தூய உள்ளம் கொண்ட ஐயா
வல்லவனின் வாசல் தேட வாழ நீங்கள் சென்றீர்களோ,

விக்னேஸ்வரர் ஆலயத்தில் நீண்ட காலத் தொண்டனாக
இக்கிராமம் பெருமைதனை ஏற்று நீங்கள் பணி தொடர்ந்தீர்
நாவ்தோன்றி அப்பரென்றும் தாந்தாமலை முருகன் என்றும்
வெள்தோன்றி புகழ் பரப்பும் நாகர் கோயில் என்றும் நீங்கள்,

வாழ்நாளை இறைபணிக்காய் அர்ப்பணித்த செம்மலல்லோ
வீழ்ந்தாலும் விதைத்ததெல்லாம் விருட்சமாகி நிழல் கொடுக்கும்
ஆழ்ந்த அறிவுடனே ஆங்கிலத்தைச் சரளமாக
பாங்காகக் கடைந்தெடுத்து பகிரவாய்ப் பேசுவீரே,


நடமாடும் நூலகமாய் நின்ற ஒரு அறிவுக் கடல்
அடக்கிவிட்டு ஒளிகொடுத்து நின்ற ஒரு தூயஜீவ
விடைபெற்று எம்மையெல்லாம் சென்று விட்டதென்ற செய்தி
தடைபோட முடியாது தகித்து மனம் அழுகிறது,

ஓடத்திற்கே வழிகாட்டும் மாலுமியைப் போன்று ஐயா
பாடத்திலே விழும் வரைக்கும் நல்லபாதை காட்டினீர்கள்
ஆடவந்தோம் சொந்தக் காலம் நாங்களெல்லாம் அவனியிலே
கூட வந்து சேர்ந்திடுமா? தேடி வைத்த செல்வமெல்லாம்,

ஆட்டுவிக்கிறான் ஒருவன் ஆடுகிறோம் நாங்கள் இங்கு
பூட்டி வைத்தாலும் உயிர்போகும் காலம் வந்து விட்டால்
கூட்டை விட்டு ஓடிவிடும் அதறுப்போர் பார்த்திருக்க
மாட்டுவிட்டோம் சிறப்பெடுத்து மனிதராக வாழ்ந்து செல்வோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விக்னேஸ்வரர் ஆலய
அரசடித்தீவு
கொக்கட்டிச்சோலை.

# குடும்ப விபரம்


தன்மப்போடி + குஞ்சிநாச்சிப்பிள்ளை
கதிராமப்போடி + நல்லம்மா
அமரர் வள்ளியம்மை
அமரர் சின்னத்தங்கம்
அமரர் பாக்கியம்
அமரர் மூத்திப்பிள்ளை
நேசம்மா
பாலாத்தை
நாகண்டாப்போடி
நாகாத்தை
அமரர் அருளானந்தம் + கருணையம்மா
கிருபேஸ்வரி + கணபதிப்பிள்ளை
ஞானசேகரம் + நந்தினி
சிவஞானசெல்வம் + பரமேஸ்வரி
கங்கேஸ்வரி + சுந்தரலிங்கம்
அருள்நாயகம் + இந்திராணி
சிவராசா + ராதாராணி
சிவபாலன் + சாந்தினி
தவமலர் + குருகுலசிங்கம்
சிறிதரன் + ஜெயந்தி
சிறிவாணி + இராசதுரை
சிறிவதனி
மஞ்சுளா
டிலாஞ்சனி
டிறோசனா
தினுஷா
ஹினோஷன்
ஜோதீஸ்வரன் + கீதா
பகீரதி
பிரபாகரன்
சிவசங்கர்
சிவரூபன்
நிமாலினி
குருசாமினி
குருசாந்தன்
குருசாளினி
திஷாணி
விதுஷன்
பவானி + ஜீவரெத்தினம்
பவானந்தன்
பிரஷோபன்
பிரஷோபிகா
ஜெகதீஸ்வரி + முரளிதரன்
தவஜோதி
கிருஸ்ணகுமார்
ஜதீஸ்வரன்
தர்சிகா
சிவமலர் + லோகநாயகம்
தரணிதரன்
தினேஸ்தரன்
கார்த்திகா
அபிநயா
அனோஜன்
அனோஜித்
ஜதுராஜ்
பகீரதன்
தரணிதரன் + பகீரதி
டிகோத்மன்
கௌசல்யா




# நன்றி நவிலல்

மனிதரில் மாணிக்கமாக வாழ்ந்து வழிகாட்டிய எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி அறிந்து எம் துயரில் பங்குகொள்ளும் முகமாக நேரில் வந்து எம்மை ஆறுதல்படுத்தியும், உதவிகள் புரிந்தும், மலர்வளையங்கள் சாத்தி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் பல வழிகள் மூலம் அனுப்பியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும், அயலில் இருந்து உதவிய அயலவர், தாந்தாமலை, கொக்கட்டிச்சோலை, அரசடித்தீவு ஆலய பரிபாலன சபையினருக்கும், மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த குறிப்பாக அஞ்சலிக் கவிதைகள் எழுதி வெளியிட்ட அதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள், அன்பர்கள் அனைவருக்கும் அந்தியேட்டி முதலிய ஆத்மசாந்திக் கிரியைகளிலும் கலந்து கொண்ட அனைவருக்கும், இந்நூலை வெளியிட உதவிய ஆதவன் அச்சகத்தாருக்கும் எம் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

இவ்வண்ணம்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை,
உறவினர்கள்.



## கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்கவிருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக்கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகின்றது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

*"இதுவே உலக நியதியும் எனது படைப்பின் சாரம்சமுமாகும்"*

**- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

ஆதவன் அச்சகம், அரசடி, மட்டக்களப்பு. 065-2222076